1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் | 29-ம் இல. | யாழ்ப்பாணம் | 1953-ம் ஆண்டு | ஆடிமாதம் | 30-ந் திகதி | வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## கிறீஸ்தவமும் தமிழும்

(வித்துவான் சவராயலுநாயகர் நினைவுநாள்விழா புதுவையில் நடைபெற்றபோது, சென்னைச் சர்வகலாசாலைச் சரித்திரபேராசிரியராகிய டக்றர் எம். ஆரோக்கியசாமி, M. A., Ph. D. அவர்கள்நிகழ்த்திய சொற்பொழிவு.)

மனிதனுக்குள்ளமுக்கியமான பற்றுகள் இரண்டு. ஒன்று மதப்பற்று, மற்றது மொழிப்பற்று. இவையிரண்டிற்கும் அவன் உயிரையும் இழக்கத் துணிகின்றான். நாவலர்கள் இவையிரண்டையும் இணைத்தே வாழ்கின்றார்கள். சவராயலு நாயக்கர்அவர்களும் இவற்றை இணைத்தே பாடினார். இவரது பாடல்களின் நயத்தையும், கருத்தையும் ஆராய்வோர் இதை நன்குஅறிவர். இதிலே அவர் ஓர்உண்மையை எடுத்துக் காட்டுகிறார். மொழிக்கும் மதத்திற்கும் முரண்பாடில்லை என்பதே அந்தஉண்மை. தமிழன் என்று கூறும்போது தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட எல்லோரும்தமிழர்கள்; அவர்மதம் எதுவாயினும்சரி என்றஉண்மையை இவர்காட்டினார்.

இந்தஉண்மையைச் சிறிது விளக்கிக்காட்டவே "கிறிஸ்தவமும் தமிழும்" என்றதலைப்பில் கிறீஸ்தவர்கள் தமிழுக்குஆற்றியுள்ள தொண்டின்திறத்தை இங்கு சிலவார்த்தைகளில் சொல்ல முன்வந்துள்ளேன். உலகமதங்கள் பலவாயினும் கிறீஸ்துவின்மதம்போல் பலமக்கள் கடைப்பிடிப்பது வேறொன்றில்லை. உலகமக்களில் ஐந்தில் ஒருபங்குபேர் கிறீஸ்தவர்கள் எனப்படுவர். இவர்கள் கிறீஸ்துவின்காலந் தொட்டுப் பன்னாடுகளிலும், பலமொழிகளிலும் வியப்புறும்வழியில் பலதுறையிலும் தொண்டாற்றியுள்ளனர். நமதுநாட்டிலும் கிறீஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவானபோதிலும் இவர்கள்ஆற்றியதும், ஆற்றிவருவதுமான பணிகள்பலப்பல.

மொழியைமட்டும் எடுத்துக் கொள்வோமானால் சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ்என்ற இவற்றிற்கும், இன்னும் உரியாமுதலிய சிறுபான்மையினம்பேசும் அதிகமாகத்தெரியாத மொழிகட்கும் அடிப்படையான பலமுக்கிய தொண்டாற்றியுள்ளனர் கிறீஸ்தவர்கள். சமஸ்கிருதத்தில் வல்லுனர்என்று பெயர்பெற்ற மாக்ஸ் முயுல்லர்அவர்கள், நமது தென்னாட்டிலே "தத்துவபோதகர்" எனவிளங்கிய "யேசுசபைக் குரவர். தெ நொபிலிசுவாமிகள் வாயிலாகவே சமஸ்கிருதம் மேல்நாடுகளில்பரவிற்று" என்று கூறிப்போந்தார். மலையாளிகள் தங்கள்பாஷையிலே மிகச் சிறந்தநூல்களாகக் கருதுவனவற்றில் தலைசிறந்துவிளங்குபவை ஏங்கில்ஸ்டன்என்ற மற்றொருசுவாமிகள்செய்த கிறீஸ்து வரலாறு முதலியனவே. இன்னும் கன்னடம், தெலுங்கு, மலையாளம்முதலிய மொழிகளுக்கும் இன்றும் நிகரின்றிநிற்கும் அகராதிகள்கண்டவர்கள் கிறீஸ்தவ குருமாரே.

மொழிவளர்ச்சிக்கு அடிப்படையாகக் கிறீஸ்தவர்கள் இலக்கணம்கண்டார்கள், அகராதிகள்கண்டார்கள், நமது நாட்டிலே. மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாத விதத்தில இன்றுஇருந்துவரும் அச்சியந்திரத்தை முதன்முதல் நம்நாட்டில் புகுத்தியவர்கள் கிறீஸ்தவ குருமார்என்றால், கிறீஸ்தவம் மொழிக்குச்செய்துள்ள தொண்டின்திறத்தை என்னவென்போம்! இங்ஙனம் அதிர்ஷ்டவசமாக இந்தியாவில் வேலைசெய்யத்தொடங்கிய முதல்அச்சியந்திரம் தமிழில்அமைந்தது. இஃது கோவாபட்டணத்தில் 1556-67-ம் ஆண்டில் அமைந்தது. இதைப்பின்பற்றி ரக்ஷோல், வைப்பின், புன்னைக்காயல் என்றஇடங்களில் அச்சகங்கள்நிறுவப்பெற்றன. வைப்பின்என்பது மலையாளநாட்டில் கொச்சிக்குஅருகில் உள்ளது. இங்குதான் தமிழர் வட்டெழுத்துக்கள் அச்சில்உருவாக்கப்பட்டன. தூத்துக்குடியை அடுத்துள்ள புன்னைக்காயல் அச்சகத்தில்தான் நாம் இன்றுபிரயோகிக்கும் அழகியதமிழ்எழுத்துகள் ஜோண் கொன்சால்வெஸ் என்ற யேசுசபைச்சந்நியாசர் ஒருவரால் அச்சில்உருவாக்கப்பட்டன. வைப்பினிலே வட்டெழுத்து அச்சில்உருவானது, அர்ச். சவேரியார் எழுதிய "வேதவினவிடை" (Catechism) என்னும்நூல்; புன்னைக்காயலில் தூயதமிழ்எழுத்தால் ஆக்கப்பட்டது "பரிசுத்தர் வரலாறு" என்ற கிறீஸ்தவ புண்ணியவாளர்கள்சரிதை. இவையிரண்டுமே தமிழ்த்தாய் முதன்முதற் கண்ட அச்சுநூல்கள். கிறீஸ்தவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டில் இது என்றும் மறக்கமுடியாத ஒரு அம்சமாகும்.

இனி, தமிழ்மொழிக்கென்று கிறீஸ்தவர்கள் ஆற்றிய தொண்டு பலதிறப்பட்டதாகும். தமிழும், கிறீஸ்தவமும் என்றாலேபோதும், சுவாமிகள் வீரமாமுனிவர் நமதுகண்முன் தம் உடையோடும், பாதகுறட்டோடும் நிற்கின்றார். அவர்செய்த 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்', 'சதுர்அகராதி', 'பரமார்த்த குருகதை', கலம்பகம், அம்மானை, காவியம்என்ற இவையெல்லாம் தமிழ்மணங்கமழும் அறிஞர்பலரால் நாவாலும் எழுத்தாலும் போற்றப்பட்டவையே. இவற்றைப்பற்றியெல்லாம் நான் அதிகம்கூறத் தேவையில்லை. அவர்எழுதியநூல்களில்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மரியகொறெற்றியின் இல்லம்

இத்தாலியிலே பெறியெறே எனுமிடத்தில் அர்ச். மரியகொறெற்றி சஞ்சரித்திருந்த இல்லம் தற்போது மற்றொருவருக்குச் சொந்தமானது. அங்குள்ள வரப்பிரசாதமாதா கோவிலை விசாரணைசெய்து வருகின்ற திருப்பாடுகளின் சபைக்குருமார் அதனைவிலைக்குவாங்கி ஓர்அர்ச்சியசிஷ்டவளின் இல்லமாகஅதனைப் பூச்சியப்படுத்திவைப்பதற்குச் செய்துவரும் பிரயத்தனம் எதுவும் பலன்தருவதாயில்லை. அந்தமனையின் வெளிச்சுவர்ஒன்றிலே இருந்துவருகின்ற மாபிள் கற்பலகைஒன்றே மரியகொறெற்றி இங்குவசித்திருந்தாளெனத்தெரிவிக்கின்றது. இதுதவிர, ஓர்வேதசாட்சியின் குருதியால் புனிதமாக்கப்பட்ட ஒரு மனை—ஓர்அர்ச்சியசிஷ்டவளின் இல்லம்—இதுதானென்று தெரிவிக்கக்கூடியது வேறொன்றுமில்லை. ஆனால், மரியாவின் வீடு அதேநிலைமையிலேயே இன்றைக்கும் இருந்துவருவது ஓர் அதிர்ஷ்டமேயாகும். ஏனெனில், அவள் அதிற்சஞ்சரித்து இருந்தபோது இருந்த உள்ளவாறானநிலைமையை அதுபடம்போல இற்றைக்கும் எடுத்துக் காட்டுகின்றது. அவள்சஞ்சரித்திருந்ததுமுதல் அதில் எவ்வித பெரும் மாற்றமுமே செய்யப்பட்டில்லை. அதேமண்சுவர்களும், ஒட்டடைப் படைகளால் மூடிய அதே அடுப்படியும், பூழ்திபடிந்த அதேதளமும், பிறவும் இற்றைக்கு ஐம்பதுவருடங்களின் முன்போலவே இன்றைக்கும் இருந்துவருகின்றன.

அதனால் அந்தவீட்டைச் சுற்றிப்பார்க்கும்போது, கொறெற்றியின் குடும்பத்தினர் எத்துணை பெரும் கொடிதானவறுமையினால் வாடியிருந்தார்களென்பதை எவருமேதெளிவாகக்கண்டுணரத்தொடங்கி விடுவார்கள். தமதுதிருக்குமாரனை ஓர்மாட்டுத்தொழுவத்தில் பெற்றெடுத்த மரியாயின்வறுமையும், லூர்துபதிப் பெர்னதேத்அம்மாளின் வறுமையும், பாத்திமாவின் லூஸியா, பிரான்சீஸ், ஜசிந்தா என்பவர்களின் வறுமையும் இங்கே மரியாவின் இல்லத்திலும் காட்சியளிக்கின்றது. கொறெற்றிகுடும்பத்தினர் வசித்திருந்த இரண்டு அறைகளில் ஒன்று படுக்கையறையாகும். மற்றது அடுக்களையும், போசனசாலையும், வசிப்பிடமும், பிறவும் அடங்கியதாகும். இந்தஅறையின் ஓர்கோணத்திலே தளத்திலிருந்து சிலசெங்கற்கள் பெயர்த்தெடுக்கப் பட்டிருக்கின்றன. அலெசாண்டிரோவின் அட்டூழியமான செயலுக்குப்பின் மரியகொறெற்றியின் தாயான அசுந்தா இந்தஅறையில் பிரவேசித்தபோது அங்குதான் தனதுமகள் இரத்தவெள்ளத்திலே குற்றுயிராய்க் கிடக்கக்கண்டாள. பக்தியுள்ள யாத்திரிகர்கள்சிலர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு, அந்தச்செங்கற்களைத் திருப்பண்டங்களாகஎடுத்துக்கொண்டு போய்விட்டனர். நெத்துனோவின் ஆஸ்பத்திரியிலே மரியகொறெற்றி தனது புனிதஆன்மாவைக் கடவுளிடம் ஒப்படைத்து உயிர்துறந்த அறையானது ஓர்சிற்றாலயமாக மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. பெறியெறேயில் அவள் நெடுங்காலம் சஞ்சரித்திருந்த இல்லமும் தனக்குரிய தான கௌரவத்தை விரைவிலே பெறுமென்று காத்திருக்கலாம்.

# பரந்த நெருப்பு

வரோணிக்கா நல்லகுடும்பத்தில்பிறந்தவள். உயர்தரப்படிப்பை முடித்ததும் பதினெட்டுமோதமாக ஒருதொழிற் கல்லூரியிற் படித்தாள். பரீட்சைமுடிந்த மறுவாரமே அவளுக்கு நல்லவேலை கிடைத்தது. மோட்டார்கம்பெனியின் முதலாளிகளுள் ஒருவரின் காரியதரிசியானுள். ஆனால், முதலாளியை அவள் இன்னும் சந்தித்துப்பேசவில்லை. அவள் செய்யவேண்டிய வேலையை மற்றொருவர் அவளுக்குளடுத்துரைத்தார்.

பகல் 12 மணியானதும் சாப்பிடும் இடத்திறகுச்சென்று 'க்யூ' வரிசையில் நின்றுள். தனதுமுறைவந்ததும் சுற்றுமேசையில் இருந்த உணவுகளிலே தனக்குப்பிரியமானவற்றை ஒரு பெரியதட்டில் எடுத்து வைத்துக்கொண்டு, பணத்தைக்கொடுத்துவிட்டுச் சுவர்அருகேஇருந்த மேசையில் வைத்து வழக்கம்போல் செபஞ்சொல்வதற்காக நின்றுள். ஆனால், புதியஇடமாயிற்றே என்றநினைவோ அல்லது பிறர் தன்னைப்பார்க்கிறுர்களே என்ற வெட்கமோ என்னமோதெரியவில்லை, வரோணிக்கா அன்று செபம்செய்யவில்லை, உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்.

மனச்சாட்சி அவளை உபாதிக்கத் தொடங்கியது. கிறீஸ்துநாதரைத் தான்மறுதலித்துவிட்டதாக உணர்ந்தாள். அவர் இன்று என்னைப்பற்றி என்னநினைப்பார்? "மனிதர்முன்னிலையில் என்னைமறுதலிப்பவன் எவனே, அவனைநானும் பரமண்டலங்களிலிருக்கிற என்பிதாவின் முன்னிலையில் மறுதலிப்பேன்" என்ற அவரதுவார்த்தைகள் அவளதுசெவிகளில் தொனித்தன. அவள்இன்று அவரைமறுதலித்துவிட்டாள்.

அன்றுவரோணிக்கா சாப்பிட்டது போல உணரவில்லை. அப்போதுசிலர் சாப்பிடும்படி அந்தமேசையருகில் உட்கார்ந்து பேசிக்கொண டிருந்தனர். அவள் அவசரமாகச் சாப்பாட்டை முடித்து, உட்கார்ந்துகொண்டே அச்சத்துடன் செபத்தைமுடித்துவிட்டு வேலைக்குச்சென்றுள். பிறகு சாயந்தரம் வீட்டுக்குப்போகையில், கன்னியர்மடத்துக் கோவிலுக்குச்சென்றுள். அங்கு எவருமில்லை. வாடாவிளக்கு எரிந்துகொணடிருந்தது. நற்கருணைக் கிருதியருகில் முழந்தாளிட்டுத் தன் உள்ளத்தைத் திறந்து கடவுளுடன் பேசினுள். தன்குற்றத்துக்காக மன்னிப்புக்கேட்டு அதற்குப் பரிகாரம் செய்வதைப்பற்றி அவருடன் கலந்து ஆலோசித்து ஒருமுடிவுக்குவந்தாள்.

மறுநாள் பகல்உணவு நேரம்வந்தது. உணவுஅருந்தும் இடத்துக்குச்சென்றதும் அவளுக்குப் பயத்தினுல் வியர்க்கத் தொடங்கியது. உணவுத் தட்டுடன் 'க்யூ' வரிசையை விட்டுவருகையில், சுட்டுக்கொல்லக் கொண்டு போவது போல உணர்ந்தாள். ஆயினும் மனத்திடனுடன் முந்தினநாள் உட்கார்ந்திருந்த அந்தமேசையருகேசென்று, தட்டைவைத்தாள். பின்னர்எல்லோரையும் பார்க்கிறுப்போல்நின்று தன்மேல் பெரியசிலுவை அடையாளம் வரைந்து "சர்வேசுராசுவாமி, என்னையும் உமதுஅருளினுலே..." என்னும் செபத்தைச்சொல்லிப் பின்னும் ஒருமுறை சிலுவைஅடையாளம் போட்டு உட்கார்ந்தாள். சாப்பிடும்போது அக்கபக்கம்பார்க்க அவளுக்குப் பயமாயிருந்தது. ஏனெனில், எல்லோரும் தன்னையே நோக்குவதாக உணர்ந்தாள். எனினும் அவளதுஉள்ளத்தில் பெரும் சமாதானம் குடிகொண்டிருந்தது. தன்மேல் தான்அடைந்த வெற்றியையிட்டு மகிழ்ந்து, வெற்றியடைய உதவிசெய்த கடவுளுக்கு நன்றிசெலுத்தினுள். சாப்பிட்டுமுடிந்ததும் எழுந்து, அசனத்துக்குப்பின் சொல்லும் செபத்தைச்சொல்லிச் சந்தோஷத்துடன் வெளிகொண்டாள்.

அன்றுபிற்பகல்அவளுக்கு முதலாளியிடமிருந்து அழைப்புவந்தது. அவள் கடிதமும், பென்சிலும் எடுத்துக்கொண்டு அவரிடம்போனுள். காரியதரிசி உட்கார்ந்துஎழுதவேண்டிய நாற்காலியின்பக்கமாய் அவள்சென்றுள். அவரோ அவளை வேறொருவசதியான நாற்காலியிலே உட்காரும்படி சொன்ஞர். பிறகு "கடிதம் எழுத நான் உன்னை அழைக்கவில்லை, இன்று நீ காண்பித்த நன்மாதிரிக்காக நன்றி தெரிவிக்கவே அழைத்தேன். ஆறு மாதகாலமாக நான்இங்கு பகல்உணவருந்தி வருகிறேன். சாப்பிடுமுன் அங்கு செபம்செய்த முதல்ஆள் நீயே. இரண்டாவதுஆள் நான். வீட்டில் நான் சாப்பிடுமுன்னும், சாப்பிட்டபின்னும் செபம்சொல்லி வருகிறேன். நான் கத்தோலிக்கன். இங்கு பிறர் முன்னிலையில் செபிக்க எனக்குத்தைரியம்பற்றுது. இன்று நீ செபித்ததைப் பார்த்ததும் எனக்குததைரியம் பிறந்தது. எனக்காகத் தயவுசெய்து செபி. நான் என்தீர்மானத்தில் உறுதியாய் நிற்க உன்செபம் எனக்கு உதவியாயிருக்கும். நாளை நீ எனக்குமுன் சாப்பிடச்சென்றுல் எனக்கும் ஒரு நாற்காலி போட்டுவை" என முதலாளிகூறிஞர்.

மறுநாள் வழமையான நேரத்துக்குச் சற்றுமுன்னதாகவே வரோணிக்கா உணவருந்தச் சென்றுள். சுவர் அருகிலிருந்த மேசையருகே சென்று முதலாளிக்கும் ஒருநாற்காலி எடுத்துப்போட்டுச் செபத்தைமுடித்து உட்கார்ந்தாள். சில நிமிஷங்களின் பின் முதலாளிவந்தார். எப்பொழுதும் அவர் மலர்ந்தமுகத்துடன் இருப்பார். அன்று அவர் உணவுத்தட்டைக் கையிலேந்தி வரோணிக்காவைத் தேடுகையில் முகம் வெளுத்திருந்தது. அவருக்குத் தைரியம் அளிப்பதற்காக வரோணிக்கா அவரை எட்டிப்பார்த்தாள். உடனே அவர் அவள்அருகில் போய்ச் செபத்தைச் சொல்லிமுடித்து உட்கார்ந்தார்.

"வரோணிக்கா, உணவுத்தட்டுடன் வருகையில் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? சுட்டுக்கொல்லும்படி என்னைக் கொண்டுபோவதுபோல் இருந்தது" என அவர் பேச்சைத்தொடங்கிஞர். அவள் சிரித்தாள். "எனக்கும் நேற்று அப்படித்தான் இருந்தது. முதல்நாள் நான் வெட்கப்பட்டுச் செபிக்கவில்லை. அது உங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன். இனி ஒருபோதுமே செபிக்கத் தவறமாட்டேன்" என்றுள். சாப்பிட்டுமுடிந்ததும் இருவரும் எழுந்துநின்று செபித்தனர். பிறர் என்ன நினைப்பார்கள் என்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

அன்றுமாலை வரோணிக்கா வீடு திரும்புகையில், கன்னியர் மடத்துக் கோவிலுக்குப்போய் ஆண்டவருக்கு நன்றிசெலுத்தினுள். இராவுசாப்பிடும்போது அன்றும், முந்தின இருதினங்களிலும் நடந்ததையெல்லாம் அவள் தன்பெற்றேரிடம் எடுத்துக்கூறினுள். "அதனுல்தான் நான்உனக்கு வரோணிக்கா என்னும்பெயரிட்டேன். நமது ஆண்டவர் நிந்தை அவமானங்களின் மத்தியில் கல்வாரியைநோக்கிச் செல்லுகையில் அர்ச். வரோணிக்கா தைரியமாய் அவரைஅணுகினுள். முகத்தாட்சணியத்துக்கு இடங்கொடுக்கவில்லை. பிறர் இழிவாகப்பேசுவார்களே என்பதையெல்லாம் அவள் சட்டைபண்ணவில்லை. தன் மனச்சாட்சியின் குரலுக்கு இணங்கி ஆண்டவருக்கு ஆறுதல் அளித்தாள். அவ்வளப்போல் என் மகளும் தன்வேதத்தைப்பற்றிப் பகிரங்கசாட்சி கூறவேண்டுமென்று விரும்பினேன்" எனத் தாய் மொழிந்தாள்.

மறுநாள்முதல் அந்தமோட்டர் கம்பெனியின் உணவருந்தும் இடத்திலே மக்கள்உள்ளங்களில் ஏற்பட்ட வெற்றிகளைப்பற்றி வர்ணிக்க வேண்டியதில்லை. வரோணிக்கா காண்பித்த நன்மாதிரியைப் பின்பற்றிக் கத்தோலிக்கர் யாவரும் உணவருந்துமுன்னும், உணவருந்தியபின்னும் செபிக்கத்தொடங்கிஞர்கள். அங்குவேலைசெய்தவர்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கரேயென அறிந்து யாவரும்அதிசயித்தார்கள்.

சில ஆண்டுகளுக்குப்பின் வரோணிக்கா வேலையைவிடவேண்டி நேரிட்டது. அவளுடன் வேலைசெய்தவர்கள் அவளுக்கு ஒரு மின்சாரகடிகாரம் வெகுமதிபண்ணிஞர்கள். முதலாளிமார் ஒருபெருந்தொகைப் பணம் கொடுத்தார்கள். அவள் வீட்டுக்குத் திரும்புகையில் கன்னியர் மடத்துக் கோவிலுக்குச்சென்று, கிருதியருகில் முழந்தாளிட்டாள். "நேசயேசுவே, நீர் மிகநல்லவர். நெருப்பைப் பற்ற வைக்கும்படி நீர் இவ்வுலகுக்குவந்தீர், அந்தநெருப்புச் சிறிதுபரவும்படிசெய்ய எனக்கு உதவிபுரிந்ததற்காக உமக்கு நன்றிசெலுத்துகிறேன்" என்றுள்.

# ஜோர்ஜியாவின் தவப்புதல்வன்

பேறியாவைத்தொடர்ந்து அசேர்பாய்ஜன்நாட்டின் பிரதமரும், அந்நாட்டின் கம்யூனிஸ்தகட்சித் தலைவருமாயிருந்த எம். டி. பாகிறவ்என்பவர் ஒழித்துக்கட்டப் பட்டுள்ளார். இவர் மீதும் "இராசாங்க துரோக" குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மற்றும் உக்றேன் உள்நாட்டுமந்திரி பி. ஒய். மெஷிக், பேறியாபிறந்தநாடாகிய ஜோர்ஜியாவின் உள்நாட்டுமந்திரி விளாடிமிர் டெகன்சாவ், ஜோர்ஜிய கம்யூனிஸ்தகட்சியைச்சேர்ந்த எஸ். எஸ். நமூலோஎன்பவர்கள் பேறியாவின் கூட்டாளிகள்என்ற காரணத்திற்காகக் கைதுசெய்யப் பட்டிருக்கின்றனர். இவர்களைத்தவிர, ஜோர்ஜியமந்திரி ஏ. என். ரப்வா, மாஜிமந்திரி ருகாட்ஸே, கட்சிப்பிரசாரகர் ஷரீயா, பேர்ளின் நகர்அதிகாரி கோபுலோ, கிழக்குஜேர்மனியின் நீதிமந்திரி பெஃனர்என்பவர்கள் குற்றச்சாட்டுகளோடு பதவிளிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர்.

### லெனினுக்குப்பிறகு ஸ்ராலின்செய்தது

சோவியற்கம்யூனிஸ்தஆட்சியானது ஆள்வேட்டையைத் தனது தொழிலாகக் கொண்டிருப்பதாகும். அதன்வரலாற்றைக் கவனித்தால் இந்தஉண்மை தெற்றெனப்புலப்படும். இந்த ஆள் ஒழிப்புஇயக்கம் 1924-ம் ஆண்டு லெனினின் மரணத்தோடு தொடங்கியது. சர்வாதிகாரி லெனின் காலஞ்செல்லவே அவரின் ஸ்தானத்திற்குப் போட்டி பலமாகஇருந்தது. போட்டிபோட்டவர்களில் ஸ்ராலின்ஒருவர். தான்சர்வாதிகாரியாகாது "வழிமறித்தவர்கள்" யாவரையும் சற்றுமே ஈவுஇரக்கமின்றித் தீர்த்துக்கட்டியவர் இந்த ஸ்ராலினே.

### டிறொட்ஸ்கிக்கு நேர்ந்தகதி

அக்காலத்திலே லெனின்வகித்தபதவிக்கு ஸ்ராலினுடன் போட்டியிட்டவர் டிறொட்ஸ்கி. அவரை ஸ்ராலின் தனது பரமவைரியாகக் கருதிஞர். டிறொட்ஸ்கியைப் பதவியிலிருந்தும், தேசத்திலிருந்தும் கடத்தவும், பின்னர் மெக்சிக்கோவில் அவரின் உயிருக்கே உலைவைக்கவும் ஏற்பாடுசெய்தார். இவ்வாறு டிறொட்ஸ்கி தொலையவே, ஸ்ராலின் தன்னுடன் முதலில்இன்னும் இருவரைச் சேர்த்துக்கொண்டு ஆட்சியைத்தொடங்கிஞர். ஸ்ராலினுடைய மரணத்துக்குப்பிறகு மலெங்கொவ்-மொலற்ரேவ்-பேறியா என்பவர்களின் "கூட்டாட்சி" சமீபகாலத்தில் எப்படி ஆரம்பமாயிற்றோ, அப்படியே அன்று லெனினின் மரணத்துக்குப்பிறகு ஸ்ராலின்-சைனேவீவ்-கமனீவ் என்பவர்களின் "கூட்டாட்சி" ஆரம்பமாயிற்று. ஆனுல், சிலவருடங்களுள் இந்த இரண்டுபேரையும் ஸ்ராலின்பின்னுக்குத்தள்ளிப் பிறகு 1936-ம் ஆண்டு அவர்களை "இராசாங்க துரோகிக"ளாக்கி ஒழித்துவிட்டார். இராணுவமும், இரகசியப்பொலிஸும் தனது செல்வாக்குக்கு உட்படும் வரையில் அவர்காத்திருந்தார். அந்தச்செல்வாக்குக் கிடைத்தவுடனே சகாக்களை "அமுக்கி" விட்டார். அப்படித் "தலைதூக்க" முடியாமற் போனவர்கள் இன்னும் எண்ணிறந்தபேர்கள்.

### முதலாளிகளின் கைப்பாவைகள்

1930-ம் ஆண்டிலே சோவியற்ருஷியாவில் ஸ்ராலின் ஒழித்துக்கட்டிய எல்லார்மீதும் சாட்டப்பட்ட குற்றம், "முதலாளிகளின் கைப்பாவைகள்," "சோவியற்கம்யூனிஸத்துக்குத் துரோகிகள்," "நாட்டைக்கவிழ்க்க முயன்றுர்கள்" என்பன போன்றதுவே. அவர்கள்மீது நீதிமன்றங்களில் ஒரு கேலிக்கூத்து விசாரணையும் நடந்தது. கைதிகளே "உண்மையை"க் கக்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அப்போது சோவியற்ஆட்சியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், சமீபகாலம் வரை ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் சோவியற் பிரதிநிதியாகஇருந்த அன்ட்று விஷின்ஸ்கிஎன்பவர்தான். 1930-ம் ஆண்டு ஸ்ராலின் முடுக்கிவிட்ட ஆள் வேட்டை ஒன்றேடுநின்றதா? இல்லை. எதேச்சாதிகாரிகள் ஆட்சிசெய்யும் பொலிஸ்இராச்சியத்தில் இதுசகசம். இதுபலவீனத்தையே குறிக்கிறது என்பதில் என்னசந்தேகம்?

### அன்றுபுகழ்ந்தவர்—இன்று....

சோவியற்ஏகாதிபத்திய மண்டலமே ஒருஇரும்புத்திரை சூழ்ந்த மாபெரும் சிறைக்கூடம்; இன்று அதற்குள்ளே ஒருசிறையில் இரகசியப்பொலிஸ்தலைவராயிருந்த லாவ்றென்ரி பேறியாஅடைபட்டுக்கிடக்கிறுர். இவரைத்தொடர்ந்து தமதுபதவிகாலத்தில் இவர் உத்தியோகத்தில் அமர்த்தியவர்களைச் சோவியற் அரசாங்கம் இப்போது வேட்டையாட ஆரம்பித்திருக்கிறது. இதைக் குறித்து, நியூயோக்ரைம்ஸ்பத்திரிகை எழுதியுள்ளதுவருமாறு: "சோவியற் ஆள்வேட்டை ஒன்றுடன்நிற்பதரிது. பேறியாவுக்கு அடுத்தாற்போல பலியாகியிருப்பவர், ஜோர்ஜியாவின் உள்நாட்டுமந்திரிபதவி வகித்துவந்த விளாடிமிர் டெகன்சாவ். இவர் மூன்று மாதத்துக்கு முன்னர்தான் இப்பதவிக்குவந்தார். இப்போது ஜோர்ஜியாவின் முதலமைச்சர் பக்ருஸி என்ன சொல்லுகிறுர்: பேறியா தனக்குவேண்டியவர்களாகப் பார்த்து உயர்ந்தபதவிகளில் வைத்திருக்கிறுர்என்கிறுர். இவ்வாறுபக்ருஸி புகார்செய்யத்தொடங்கியிருப்பதால், இன்னும் எத்தனைபேர் ஜோர்ஜியாவில் ஆள்வேட்டைக்குப் பலியாக இருக்கிறுர்களோ?

### அன்று தவப்புதல்வன்—இன்று....

இதேபக்ருஸிதானே மூன்றுமாதங்களுக்குமுன் பேறியாவை உச்சிமீது வைத்துக்கொண்டு, "ஜோர்ஜியாவின் தவப்புதல்வன், லெனினின் திறமைமிக்கசீடன், ஸ்ராலினின் உறுதுணைவன், கம்யூனிஸ்த கட்சியின் தூண், சோவியற்வீரன்" என்று கூத்தாடிஞர். இப்படிச் சமயத்துக்குத்தக்கபடி பேசும் பக்ருஸி எப்படித் தனது பிராணனைக் காப்பாற்றிக்கொள்வார் என்பது பொறுத்துப்பார்க்க வேண்டிய விஷயம்."

### அவருக்கே கூற்றுவனுக அமைந்தது

சிலமாதங்களுக்குமுன் பேறியாவே என்னசொன்னுர்? ஸ்ராலினின் ஈமச்சடங்கில் பேசியசமயத்தில் அவர்கூறியதாவது: ஸ்ராலினின் மரணத்தினுல் நமக்கேற்பட்டுள்ள இந்தஅளவிடமுடி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கத்தோலிக்க சமாச்சாரம்

## அமலோற்பவ நிர்ணய நூற்றாண்டு

தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்தார் என்பதை நிர்ணயித்து விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ்செய்த நூறும் ஆண்டாகிய அடுத்துநிகழும் 1954-ம் ஆண்டிலே பரிசுத்தபாப்பரசரால் அர்ச்சியசிஷ்டபட்டம் அல்லது முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படும் அநேக சுத்தவாளர், சுத்தவாளிகளில் முத். பத்தாம்பத்திநாத பாப்பானவரும ஒருவராவர். இந்த நூற்றாண்டு விழாவை விசேஷவிதமாகக் குறிக்குமாறு பரிசுத்த பிதா வழமைக்குமாறாக ஓர் விசேஷ பரிசுத்த வருடத்தைப் பிரகடனஞ்செய்வாரென்று ரோமாபுரியிலே மறுபடியும் ஓர் கதைபரந்திருக்கிறது. ஆனால், இதைப்பற்றி அதிகாரமுறையில் இன்னுமோர் செய்தியும் வெளியாகவில்லை. ஆனால், அவ்வாண்டு தேவமாதாவின் மோட்சாரோபண திருநாளாகிய ஆவணிமாதம் 15-ந்திகதியன்று பாப்பரசர் உலகின் பல்வேறுபகுதிகளிலுமுள்ள தேவதாயாரின் பேரான அநேக திருசேத்திரங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கென்று ஒரு தொகையான விசேஷபலன்கள் அளித்துப் பிரசித்தஞ்செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், அவ்வருடத்திலே ரோமாபுரியிலும், வேறிடங்களிலும் தேவதாயாருக்குத் தோத்திரமாக அநேக திருவைபவங்கள் நடந்தேறுமென்பது நிச்சயம்.

## போர்வீரரான குருத்துவமாணவர்

அமெரிக்க ஐக்கியதேசத்திலே முன்னர் யுத்தவீரராயிருந்தாருள் 4,800 பேருக்கு மேற்பட்டவர்கள் குருத்துவத்திற்குப் பயின்றுவருகின்றார்கள். இவர்களின்தொகை ஏறக்குறைய ஓர்அரைப் பட்டாள வகுப்புக்குப் போதியதாகும். பட்டாளங்களைவிட்டு விலகும்போது, யுத்தவீரர்கள்பலரும் தங்கள் குருத்துவஅழைத்தலைப் பரிசோதிக்கவிரும்பிப் பட்டாள மேற்றிராணியாருக்கு மனுப்பண்ணிக் கொள்ளுகின்றார்கள். இதுவரை ஐயாயிரம்மனுக்கள் வரையிலே அனுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றிலே நூற்றுக்குப் பத்துவிகிதமும் பட்டாள அதிகாரிகளிடமிருந்து கிடைத்தனவாகும்.

## மஸ்கோவில் வாரச்சஞ்சிகை

சோவியற்ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலே சென்றசித்திரைமுதல் வாரந்தோறும் ஓர்கத்தோலிக்க சஞ்சிகை வெளியாகிக்கொண்டுவருகிறது. இதனைப் பிரசுரஞ்செய்கிறவர், ஜனாதிபதிறூஸ்வெல்ற்றுக்கும், எம். லிற்வினவ்வுக்குமிடையே 1933-ம் ஆண்டுசெய்யப்பட்ட உடன்படிக்கைப்படி, அந்நகரிலே அமெரிக்க இராசியப்பிரதிநிதிகள் வசிக்கும்பகுதியின் கத்தோலிக்க விசாரணைக்குருவாய் இருந்துவருகின்ற ஓர் அமெரிக்க குருவரான வண. ஜோர்ஜெஸ் பிசொனெற்றி சுவாமியாரே. இது ஆங்கில, பிரான்சியபாஷைகளில் வெளிவருகின்றது. இதிலே சிறுபிரசங்கங்களும், வினாவிடைரூபமான ஞானோபதேசக்கல்வியும், விசாரணைப்பங்குச் சமாச்சாரங்களும் அடங்கியிருக்கின்றன. "கானகத்தில் குரலொலி" என்பது இதன்நாமம்.

## புதிய பிரான்சிய பிரதமர்

பிரான்சின் புதியபிரதமராகத் தற்போது பதவிஏற்றிருப்பவரான எம். யோசெவ் லானியெல்அவர்கள் ஓர்கத்தோலிக்கர். விசியேபகுதியைச் சேர்ந்தவர். இவர் பிரான்சிய பாராளுமன்றத்திலே அப்பகுதிப்பிரதிநிதியாகக் கடந்த 25 வருடங்களாக இருந்துவருகின்றார். இவருக்குமுன் இவர் தந்தையார் 40வருடங்களாக அத்தொகுதிப் பிரதிநிதியாக இருந்துவந்தார். புதிய பிரதமர் ஓர்புடவைமில்லின் சொந்தக்காரர். இவர்அங்குள்ள சுவாதீன குடியரசுக் கட்சியின் தலைவராக 1945-ம் ஆண்டு தெரியப்பெற்றார். இவரின் மந்திரிசபையில் கத்தோலிக்கர்அநேகர் இருக்கின்றனர். அதன் 22 அங்கத்தவர்களில் 18 பேரும் பாரம்பரியமாகக் கிறீஸ்த சட்டமுறையை ஆதரிக்கிறகட்சிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களிலெல்லாம் மிகவிசேஷப்பட்டவர், மற்றும்ஓர்தாம் வெளிநாட்டுமந்திரியாராக நியமனம்பெற்றிருக்கும் எம். ஜோர்ஜெஸ் பிதோளனும் கத்தோலிக்கபிரமுகரே. கத்தோலிக்க எம். ஆர். பி. கட்சியின் முதல்வரான எம். பீற்றர் ஹென்றி ரெயிற்ஜெற்அவர்கள் உதவிப் பிரதமர்கள் மூவரில்ஒருவர்.

## மனந்திரும்பிய சீனஜெனறல்

சீனத் தேசியஅரசின் சேனையிலே ஓர்தளபதியான ஜெனறல் லங்அவர்கள் சிலகாலத்தின்முன் வடசீனாவிலிருந்து ஹொங்கொங்தீவிற்கு ஒளித்துமறைந்து உயிரையுங்கொண்டு தப்பியோடுகையில் ரோமாபுரிக் கத்தோலிக்கமறையின் பாதையைக் கண்டுகொண்டது மாத்திரமல்ல, ஆனால் இதுவரை தமதுசாதியினரான இருநூற்றுக்குமேற்பட்ட சீனர்களை அத்திருமறையில்கொண்டுவந்து சேர்த்துமிருக்கின்றார். தாம் உயிர்தப்பிக்கொண்டது ஓர்அற்புதமென்றே அவருக்குத் தோற்றுகின்றது. இதுதான் அவர் சமயத்தைப்பற்றிச்சிந்திக்க வழிதிறந்துவிடலாயிற்று. அவர் கௌலூன்நகரிலே மறினோல் மிஷன்ஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்திருந்தபோது ஓர் துவிபாஷிகர்மூலம் அங்கிருந்த கன்னியாஸ்திரிமாருள் ஒருவர் அவருக்குக் கத்தோலிக்கசமயத்தைப்பற்றி அறிவுறுத்தினர். தாம்மனந்திரும்பிக் கத்தோலிக்கரானதுமுதல இந்தச்சீன ஜெனறல் தமக்குள்ள செல்வாக்கு, கல்வியறிவு, கௌரவம், புருஷத்துவம் ஆதியவற்றையெல்லாம் தமது மனந்திருப்பும் முயற்சியிலே பிரயோகித்துவருகின்றார்.

# ஜெருசலேமும் ரோமைநகரும்

S. Nicholas, O. M. I.
தமிழாக்கம் ஆசிரியர் வி. பி. மரியாம்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

ஆயினும், காலந்தோறும் சமுத்திர அலைகள்போன்று எழுந்துகொண்டிருந்த எதிரிடைகளோ இம்மட்டன்று. தேவசுதனையே அணுப்பமுயன்ற பிசாசானது அவர்ஏற்படுத்திய சத்தியதிருமறை அத்துணை வேகமாகப் பரம்புவதைக் கண்டு மனஞ்சகிக்க மாட்டாமல் ஆவேசங்கொண்டு முளையிலேயே அதனைக் களைந்துபோட வேண்டுமெனமுனைந்து அரும்பாடுபட்டது. நரகச்சாத்தான் நீரோவிற் குடிகொள்ளவே, அவன் அகோராத்திரங் கொண்டெழுந்து, முன்பின் ஆலோசியாது கிறீஸ்தவர்களையெல்லாங் கொன்றழித்து விடும்படியாய்க் கட்டளைபிறப்பித்தான். கிஞ்சித்துந்தாமதியாது, தன்கட்டளையைநிறைவேற்றி வைக்குமாறு தனக்குக்கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் தத்துவங் கொடுத்தான். சத்தியமறையினர் சமஸ்தரையும் விரட்டிக் கலைக்கவும், கலகங்களைக்கிளப்பி அவர்களையெல்லாம் சங்கரிக்கவும் உபாயம்வகுத்தான்.

ஆ! என்ன கொடுமை! கொலைஞர்கள் மூலைமுடுக்குகள் எல்லாம் தேடித்துரந்துபிடித்து ஆயிரமாயிரவரைத் தினமும் உயிர்வதை செய்தார்கள். உதைத்து அடித்தும், கீறிக் கிழித்தும், அம்புகளால் எய்தும், சிலுவையில் அறைந்தும் சித்திரவதை புரிந்தார்கள். கொலிசியத்தின்கண் அமைந்துள்ள அம்பிதியேற்றரிலே சிங்கம், புலி, கரடிமுதலாம் கொடியவன விலங்குகளுக்கு முதலாய்க் கிறீஸ்தவர்களை இரையாக்கத் தீர்மானித்தார்கள். இத்தகைய அநாகரீகமும், மனுத்தன்மையுமற்ற கொடிய குரூரகாட்சிகளை நாளாந்தம் நடத்திக் குதூகலமுற்றார்கள். ஈரஞ்சிறிதுமில்லாத இராட்சதர்கள்போன்று பிசாசின் மாயசூட்சியில் அகப்பட்டு, மானிடஉருவங்கொண்ட உலுத்தப் பைசாசகணங்களானார்கள்.

மாசற்றகுழந்தைகள் எத்தனையோபேர் அவர்களின் வாளுக்கும், தீக்கும் பலியானார்கள். வாலிபர், வயோதிபர், தாய்மார் முதலாய் அரசன் ஆஞ்ஞைப்படியே கொல்லப்பட்டார்கள். இவர்களோ நீதிமன்றத்திற்கும், நியாயதுரந்தரருக்கும் அஞ்சாது, எவ்விதவிரட்டலுக்கும் பயப்படாது கிறீஸ்துநாதரே தமதுகதி, அவரே சத்தியரும், சகலசம்பூரணரும் என்பதைச் சகலருக்கும் பிரசித்தமாக அறிக்கையிட்டு நின்றார்கள். தங்கள் ஆருயிரை மனோற்சாகத்துடன் தியாகஞ் செய்தார்கள். தங்கள் உலகசம்பத்துகள் சகலத்தையும் மனோகரத்துடன் விட்டுப்பிரிந்து பரலோகவீடாகிய நித்தியமோட்சபாக்கியத்தைச்சுகிக்க விரைந்துசென்றார்கள். அவர்களின் குருதிவெள்ளம் அதிகரிக்க அதிகரிக்க, வேதசாட்சிகளின் தொகையும் அதிகமாயிற்று. அவர்கள்காண்பித்த தைரியம், வேதவைராக்கியம், தேவநேசம்ஆதியன மற்றும்அநேகரையும் தூண்டிவிடவே, வேதசாட்சிகளின் இரத்தவெள்ளமானது பலசிற்றாறுகளாகப் பிரிந்து, ரோமைநகரின் பலதிக்குகளிலும் பரவியது. எங்குநோக்கினும் ஒரேசிவப்புமயமாய்க் காணப்பட்டது. மக்களின் இதயங்களைச் சுத்திகரிக்கச் சொரியப்பெற்ற செவ்விய இரத்தம் இதுவாகும்.

வேதகலாபனைகளும், அஞ்ஞான ரோமைச்சக்கரவர்த்திகளின் கொடுங்கோலும் பலநூற்றாண்டுகளாக நிலைபெற்றன. ஆனால், இந்த அசுரர்கள் கொண்டஆசை நிறைவேறவேயில்லை. அவர்கள்எண்ணிஎதிர்பார்த்தபடி சத்திய திருச்சபை அழியவுமில்லை, சிறிதேனும் தத்தளித்துத்தளரவுமில்லை. ஆனால், முன்னிலும் அதிகமாக அதுபலமுற்று, பலனளிக்கும் நற்கனிகள் நிறையப்பெற்று, நித்திய பேரின்பவாழ்விற்கு இன்றியமையாத ஏகவழியினை மக்கள் அறியப்பண்ணும் மஹோன்னத உபாத்தியாயர் போன்றிருந்தது. அதனால் திருச்சபை இன்றும்என்றும் நிலைத்திருப்பது ஏனெனில், திவ்வியகர்த்தர்தாமே உலகமுடிவுபரியந்தம் நமதுதிருமாதாவாகிய சத்திய திருச்சபையுடன் இருப்பதாக வாக்களித்திருப்பதேயாகும். அங்ஙனமாக அது ஒருபோதுமே அழியவும், ஒழியவும் மாட்டாதென்பதுசத்தியம். அதனால் ரோமைநகர் அதன் தலைவராது தலைநகராய் விளங்குவதும் பொருத்தமானதே.

தேவதிருவருளால்கடைசியாக அமைதியுண்டாயிற்று. ரோமைநகரம் புதிய போர்வைஒன்றை அணிந்தாற்போன்று பிரகாசித்தது. அஞ்ஞான இருள்நீங்கி மெய்ஞ்ஞானஒளி தன்னகத்தே வீசப்பெற்றதுபோல் தெய்வீக சோதி நிறைந்து சொலித்தது. அதனை இதுவரை அறியாமையிலே அமிழ்ந்தவைத்து அல்லற்படுத்தியசாத்தான் பெரிதுஞ் சலிப்புடன்அகன்றது. பொய்த்தேவர்களின் ஆலயங்களெல்லாம் வழிபடுவாரின்றிக் காலியாயின. ரோமைச்சக்கரவர்த்திகளெல்லாம், அரோசித்து வெறுத்த கலிலேயனான கிறீஸ்துநாதரின் சதாஞாபகார்த்தமாக உலகில் மகாப்பிரமாண்டமான ஓர் மகாலயத்தைக் கட்டியெழுப்ப அஸ்திபாரமுமிட்டனர். "ஓ! கலிலேயனே! நீ உண்மையில் எங்கள் நாட்டை வெற்றிகொண்டாய்" என யூலியன் ஓலமிட்டு உயிர்துறந்தான். புதியஇஸ்ரேயேல் செங்கடலைச் சேமமேதாண்டிக் கழுகுக்கொடியை இறக்கி அதனிடமாகத் தனது சிலுவைக் கொடியை நிலைநாட்டியது.

(தொடரும்)

## திருநாள் அட்டவணை

### ஆவணிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| சனி | 1 | அ. இராயப்பர் சங்கிலித் திருநாள் | (வெ) |
| ஞா | 2 | இஸ்பிரீத்து ஆகம. பின் 10-ம் ஞாயிறு—அ. லிகோரியார், மே. வேதபா. (போஷிங்குலாஎனும் பரிபூரண பலனடையும் நாள்) | (ப) |
| திங் | 3 | அ. முடியப்பர் சரீரங் கண்டெடுத்ததிருநாள் | (சி) |
| செ | 4 | அ. சாமிநாதர், கு. | (வெ) |
| புத | 5 | அதிசய பனிமாதா திரு. | (வெ) |
| வி | 6 | கர்த்தர் மறுரூபமான திரு. | (வெ) |

சத்தியவேத
பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
ஆடி மாதம் 30-ந் திகதி

## அன்றைய சம்பவம்

அரசாங்கம் உணவுமான்யத்தை வெட்டியதையிட்டோ, அன்றேல் அதன் தவறான ஏதும் செயலையிட்டோ எவருமே கண்டனஞ்செய்யலாம். ஆட்சேபிக்கலாம். கண்டனக்கூட்டம் நடத்தலாம். ஆனல், அரசாங்கத்தைஎதிர்த்துத் தண்டுமிண்டில் இறங்குவதோ மிகவும் அடாத்தான — மிகவும் பாரதூரமான தீமைகளை உண்டுபண்ணக்கூடியதான ஓர்சதிச்செயலாகும். கொழும்பிலே சென்ற வியாழக்கிழமைமாலை பிரதிநிதிகள்சபை கூடியிருந்தபோதும், பிந்தக் கால்பேஸ் மைதானத்திலே எதிர்க்கட்சித் தலைவர்கள் நடாத்திய கூட்டத்தைத்தொடர்ந்தும் நிகழ்ந்த சம்பவங்கள் கெடுதிக்குரியனவும், பெருங்கவலையைத் தருவனவும், எமதுநாட்டின் நல்லபெயரைக் கெடுப்பனவுமாகும். அன்று பாராளுமன்றத்தைத் தாக்க இருதடவைமுனைந்ததும், வீதிப்போக்குவரத்தைத் தடுக்க முயன்றதும், கடைகள், கட்டடங்கள், வாகனங்களுக்குக் கல்முதலியவற்றால் எறிந்ததுமாகிய காடைத்தனமான செயல்களைக் கவனிக்குமிடத்து, அவற்றில்ஈடுபட்டவர்கள் எதிர்ககட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள்சிலரால் எவ்வளவாக ஆவேசமூட்டப் பட்டார்களென்பது நன்கு புலனாகும். அன்றுபொலிசர் குண்டாந்தடியும், கண்ணீர்ப்புகையும் பிரயோகித்திராவிடின் என்ன நிகழ்ந்திருக்கும்? எத்தனைபேர் உயிர்இழக்க நேர்ந்திருக்கும்? பொதுசனசேமத்தையும், சமாதானத்தையும், நல்வாழ்வையும் ஆசிக்கின்றஎவர்தான் அன்று பொலிசர் உயிரையேபாராது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டாதிருக்கமுடியும்? "பட்டால்அறிவன்சண்டாளன்" என்பதற்கிணங்க, அன்றைய சம்பவங்களுக்குப்பிறகுதான் கருமத்தை உணர்ந்து போலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்ப்பதிலே காடைத்தனத்தை ஆயுதமாகப் பிரயோகியாது, சமாதானமும் உறுதியுமான வழிவகைகளைக் கையாளும்படியாகச் சென்ற ஞாயிறுவாரம் குருநாகலில் நிகழ்ந்த கூட்டம்ஒன்றில் எதிர்க்கட்சித்தலைவர் கண்ணீர்பெருகக் கூறிநின்றார். அக்கட்சியைச் சேர்ந்த மற்றொருவர்பேசியபோது: "நீங்கள் சமாதான முறையிலே கருமம்பார்க்குமிடத்துத்தான் உங்கள்கிளர்ச்சி பலன்அளிக்கும்" எனக் கூறியிருக்கின்றார். எதிர்க்கட்சிகளெல்லாம் கட்சிபேதத்தைக் கைவிட்டு, அரசாங்கத்தைக் கைப்பற்றுதற்கான இயக்கம் நடத்தவேண்டுமென எதிர்க்கட்சியினருள்ஒருவர் கூறியிருப்பதிலிருந்து அவர்களின்போக்கைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. ஆனல், எதிர்க்கட்சிகள் கட்சிபேதத்தைக் கைவிடுமா? கைவிட்டுக் கைகோத்துக் கொண்டு வேலைசெய்யுமா? அவ்வாறு வேலைசெய்வதற்கு 27 பேரையேகொண்ட எதிர்க்கட்சியில்அடங்கியுள்ள குட்டிக்கட்சிகள் ஒன்றுஇரண்டா? இரண்டுமூன்ரு? மூன்றுநாலா? ஏழுஎட்டுவரையிலே அவைகள் இருக்கும்போது — பச்சைமண்ணும் சுட்டமண்ணும் போல அவைகள் இருக்கும்போது — பொதுவுடைமையிலே வேறு வேறுகொள்கைகளை மேற்கொண்டுள்ள மூன்றுகட்சிகளையும் இத்தனைவருடகாலமாகப் பொருத்திக்கொள்ள முடியாதிருக்கும்போது அவைகள்தான் ஐக்கியப்படுமா? அவைகளால் மக்களுக்குத்தான்நன்மையுண்டாகுமா? இரும்புத்திரை நாடுகளிலே இன்று உண்டாயிருக்கும் பஞ்சத்தையும், அமைதியீனத்தையும் அகற்றிக்கொள்ளவழிகாணுத "மக்களின் ஆட்சி" இங்கேயும்வருமானல் குறைக்குரக்கன் திரித்த மாதிரியாகவே முடியுமென்க.

## கோறிய யுத்தநிறுத்தம்

கோறியாவிலே மூன்றுவருடகாலமாய் மும்முரமாக நடைபெற்றுவந்த யுத்தத்தை நிறுத்துதற்கான உடன்படிக்கைக்குக் கடைசியாகச் சென்ற 27-ந் திகதி கைச்சாத்திடப்படலாயிற்று. அதன் விளைவாக 150 மைல்நீளமான போர்முனைநீளம் நடைபெற்றுவந்த யுத்தம் நிறுத்தப்படலாயிற்று. இந்தயுத்தத்தையும் ஓர் உலகயுத்தமென்றே ஓரளவில் கூறலாம். ஏனெனில், ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தைச்சேர்ந்த பத்தொன்பது நாடுகளின் போர்வீரர்களும், கப்பலோட்டிகளும், ஆகாய விமானிகளும் கம்யூனிஸ்தர்களை எதிர்த்து இந்தயுத்தத்தில் ஈடுபடலாயினர். அந்தஸ்தாபனத்தைச்சேர்ந்த வேறு இருபத்து மூன்றுநாடுகள் யுத்தத்தைக் கொண்டு நடத்துதற்கென்று வைத்தியஉதவியும், பிறஉதவிகளும் செய்துவரலாயின. இந்த யுத்தத்தில் மிகப்பெரும் பங்கு பற்றியது அமெரிக்கவரசேயாகும். அது போர்வீரராகமாத்திரம் இரண்டரை லட்சம் பேரைப் போர்முனைக்கு அனுப்பிவைத்தது. வடகோறியகம்யூனிஸ்தபடைகள் தென்கோறிய குடியரசுநாட்டின்மீது படையெடுத்து ஆறுதினங்களின்பின் — அதாவது 1950-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதியன்று அமெரிக்கபடைகள் கோறியாவில் இறங்கின. ஒருமாதத்தின்பின் பிரித்தானிய படைகள் போய் அவற்றுடன் சேர்ந்துகொண்டன. அவ்வருடம்முடிவாகுமுன் ஏனைய பதினேழு நாடுகளும் படையுதவி அளித்தன. அப்போது தென்கோறியா தகுந்த ஆயுதங்கள்இல்லாத இருபத்தையாயிரம் போர்வீரரையே கொண்டிருந்தது. ஐக்கியநாடுகளினது ஸ்தாபனத்தின் உதவியாலேயே ஆக்கிரமிப்பினின்றும் தென்கோறியா பாதுகாக்கப்படலாயிற்று. இன்று அந்நாட்டிலே யுத்தநிறுத்த உடன்படிக்கையும், யுத்தநிறுத்தமும் ஏற்பட்டபோதிலும் அங்கு சமாதானம் ஏற்பட்டு விட்டதென்று நினைக்கப்படாது. "பீரங்கிகளின்சப்தம் நின்றுவிட்டபோதிலும் ஓர் நிரந்தரமான அரசியல் உடன்பாடு ஏற்படுகிறவரையிலே தகராறு தீர்ந்துவிட்டதாகாது; இது சமாதானமல்ல, ஓர் யுத்தநிறுத்தமே" யென்று அங்குள்ள ஐக்கியநாடுகளின் பிரதமசேனபதி கூறியிருக்கின்றார். "கோறிய யுத்தநிறுத்தம் என்பது சமாதானம் அல்ல" என்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரியார் கூறியிருக்கின்றார். அதனல் கோறியாவில் சமாதானம் ஏற்படுமா? என்பதே இன்றைய கேள்வியாகும். யுத்தநிறுத்தம் ஏற்பட்டுத் தொண்ணூறுநாட்களில் கூட்டப்படும் அரசியல் மகாநாடு தொண்ணூறுநாட்களில் செய்யும் தீர்மானத்திலிருந்தே அதற்கு விடைகிடைக்கும். பொதுவாகச் சமாதானம் ஏற்படவேண்டுமென்றே உலகமுழுவதும் ஆசிக்கின்றது.

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
## 10-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 18: 9—14)

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக்காலத்திலே, தங்களை நீதிமான்களென்று நம்பி ஆணவங்கொண்டு மற்றவர்களை அலட்சியம் பண்ணிவந்த சிலரைக் குறித்து அவர் பின்வரும் உவமையைச் சொன்னர். இரண்டு மனிதர் செபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனர்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன்; மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்றுகொண்டு தனக்குள்ளே செபித்ததாவது: சருவேசுரா, நான் திருடர் அநீதர் விபசாரக்காரராகிய மற்றமனிதரைப்போலவும், இந்தஆயக்காரனைப்போலவும் இராததைப் பற்றி உமக்குத்தோத்திரஞ் செய்கிறேன். நான் வாரத்தில இருமுறை ஒருசந்தி பிடிக்கிறேன்; எனக்குள்ள எல்லாவற்றிலும் பத்திலொருபாகம் செலுத்துகிறேன் என்றான். ஆயக்காரனே, தூரத்தில்நின்று தன் கண்களைமுதலாய் வானத்தை நோக்கிஉயர்த்தத் துணியாமல், தன் மார்பில் அறைந்து கொண்டு: சருவேசுரா, பாவியாகிய என்பேரில் கிருபையாயிரும் என்று செபித்தான். இவனே அவனைவிட நீதிமானகித் தன்வீட்டுக்குத் திரும்பிப் போனனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், தன்னைஉயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.



## சுத்தபோசனமும் ஒருசந்தியும்

பரிசுத்தஸ்தானம் நமக்கு அளித்திருக்கும் அனுமதிப்படி சுத்தபோசனம், ஒருசந்திவிஷயமாய் இருந்துவருகின்ற ஒழுங்குகளைத் திருத்துவது தகுதியாகுமென எண்ணுகின்றோம். அதன்பிரகாரம் இனிமேல் நமது மேற்றிராசன முழுவதிலும் அனுசரிக்கப்படவேண்டிய ஒழுங்குகள் வருமாறு:

### சுத்தபோசனம்

1. கடன்திருநாள் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் நீங்கலாக வருடத்தில்வரும் எல்லாவெள்ளிக்கிழமைகளிலும் சுத்தபோசனம் அனுசரிக்கப்படவேண்டும்.

### ஒருசந்தியும் சுத்தபோசனமும்

2. ஒருசந்தியும், சுத்தபோசனமும் அனுசரிக்கப்படவேண்டிய நாட்கள் பின்வருமாறு:

i விபூதித்திருநாள்.
ii பெரியவெள்ளிக்கிழமை.
iii தேவமாதா மோட்சத்துக்கு ஆரோபணமான திருநாளுக்கு முந்தியதினம்
iv நத்தால் திருநாளுக்கு முந்தியதினம்.

ஒருசந்தி நாட்களில்தானும் முட்டை, பால், வெண்ணெய், பாற்கட்டி பாவிக்க அனுமதிக்கப்படுகிறது.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்
29-7-53

## கிறீஸ்தவமும் தமிழும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும்அதிகமாக வழக்கத்தில் இல்லாதவற்றைப்பற்றியே ஈண்டுகுறிப்பது பொருந்தும். இவற்றில்ஒன்று "தொன்னூல் விளக்கம்" எனப்படுவது. பெயருக்கேற்றபடி இந்நூலில் முனிவர் தொல்காப்பியம்முதலிய பழந்தமிழ்நூல்களில் காணும் குறிப்புக்களையெல்லாம் கோர்த்து அமைத்துள்ளார்.

(தொடரும்)



# சுதேச வர்த்தமானம்

## காலநிலை

சிலதினங்களாய்ப் பங்குனிமாதத்திற்போன்று அகோரவெயில் எறித்துவந்து கடைசியாய்ச் சென்ற இரவு பெரும்மின்னல்முழக்கத்துடன் மழை பெய்யலாயிற்று. இன்றும் அதிக மழைக்கோலம் காணப்படுகின்றது.

## இலக்கிய பண்டிதபட்டம்

கொழும்பு அதிமேற்றிராசன் கத்தோலிக்க பாடசாலையின் பிரதமமுகாமைக்காரரும், ஐக்றிங் விக்கார்ஜெனறலுமான அதிவண. டி. ஜே. அந்தோனிசுவாமியவர்கள் சாதித்துள்ள அருஞ்செயல்களையும், இலங்கையிலே கத்தோலிக்க சமூகத்துக்கும் பொதுசன சமூகத்துக்கும் ஆற்றியுள்ள பலசேவைகளையும் பாராட்டிக் கனடாதேச ஒற்றாவா சர்வகலாசாலையானது அவருக்கு இலக்கியபண்டிதர் என்றபட்டம் சன்மானித்திருக்கின்றது. தற்போது 59 வயசுடையவரான சுவாமியவர்கள் கடந்த 32 வருடங்களாக ஓர் குருவாய் இருந்துவருகின்றார். இவர் 16 வருடகாலம் கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரியில் ஓர்பேராசிரியராகவும், பிந்த அக்கல்லூரியின் உபதலைவராகவும் கடமையாற்றியிருக்கின்றார். அதன்மேல் கடந்த 13 ஆண்டுகளாக அதிமேற்றிராணியாரின் ஆலோசனைச்சங்கத்தில் ஓர்அங்கத்தவராயும், அதிமேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரராயும் இருந்துவருகின்றார். இவை தவிர அவர்வகித்திருக்கும் பிறபதவிகள் அநேகமாகும். சிங்களப்பாஷையிலே பாண்டித்தியமுள்ள சுவாமியவர்கள் அப்பாஷையிலே இருபதுக்கு மேற்பட்ட அருமையான புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார். இவைகளெல்லாம் அவரின் சிறந்தஆற்றலுக்கும், அறிவுக்கும் போந்தசான்றுகளாகும்.

## மேலதிகமாக முக்காற்படிஅரிசி

அரிசி உதவும் விஷயமாய்வருகிற ஆவணிமாதம் 3-ந் திகதி திங்கட்கிழமைமுதல் பின்வரும் நிரந்தரமான ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. கூப்பன்புத்தகம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் கூப்பன்அரிசி வாங்கும் சங்கக்கடைகளிலோ அன்றேல் சில்லறை வியாபாரிகளிடமோ கூப்பன் அரிசியைவிட மேலதிகமாக முக்காற்படி அரிசி வாங்கிக்கொள்ளலாம். இதன் விலை கூப்பன் அரிசியிலும் படிஒன்றுக்குப் 16 சதம் கூடுதலாயிருக்கும். அதாவது முக்காற்படி அரிசிக்கும் அறுபத்துநாலரைச்சதம் முடிகின்றது. இந்தமுக்காற்படி அரிசியையும் ஒவ்வோர்கூப்பனுக்கும் வாரம்ஒருமுறை வாங்கிக்கொள்ளலாம். தொழிலாளியின் கூப்பன், சாதாரணகூப்பன், பிள்ளைக் கூப்பன், குழந்தைக்கூப்பன் என்ற பேதமில்லாது எல்லாக் கூப்பன்களுக்கும் இந்தஅரிசி கொடுக்கப்படும்.

## 569 சாட்சிகள்

பாராளுமன்றத்துக்கு ஹக்மனைப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரான திரு. சி. ஏ. தர்மபாலா அவர்களின் தேர்தல் முறைகேடானதென்று ஆட்சேபித்துச் சுப்பிறீங்கோட்டுக்கு மனுப்பண்ணியவர் தனது சார்பாக 569 சாட்சிகளைக் கொண்டிருக்கின்றார். இந்தச்சாட்சிகள்எல்லோரையும் விசாரணைசெய்கிறதானால், புரட்டாசி மாதம் 14-ந் திகதிவரையிலே விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்குமென்று மனுவை விசாரணைசெய்து வருகின்ற சங். சுவான்நீதியாசர் தெரிவித்திருக்கின்றார்.

## றெயில்வேச் சலார்ஏற்றம்

ஆவணிமாதம 1-ந் திகதியாகிய வருகிற சனிக்கிழமைமுதல் றெயில்வேப் பிரயாணசலார்கள் மூன்றுவகுப்புகளுக்கும் மைல்ஒன்றுக்கு ஒருசதவீதம் ஏற்றப்படவிருக்கின்றன. இதனால் றெயில்வேப்பகுதிக்கு ஒருகோடி ரூபா கூடியவருமானம் கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் சீசன் திக்கெற்றுகளின் சலார் நூற்றுக்கு 25 சதவீதமும், சாமான்கள் ஏற்றியிறக்கும் சலார் 10 முதல் 25 வீதம்வரையிலும், பார்சல்களின்சலார் 10 வீதமும், ஆடு மாடு குதிரை ஆதியவற்றை ஏற்றியிறக்குஞ்சலார் 25 வீதமும் ஏற்றப்படவிருக்கின்றன.

## கடுதாசித் தொழிற்சாலை

வாழைச்சேனையிலே கடுதாசித் தொழிற்சாலையை அமைக்கும்வேலை மீளவும் தொங்கிவிட்டது. அதற்குத் தேவையான யந்திரசாதனங்களில் ஏறக்குறைய முழுவதும் வந்துசேர்ந்துவிட்டது. ஆனால், தொழிற்சாலை உள்நாட்டில் உற்பத்தியாகும் இலுக்என்ற புல்லையும், நெல்வைக்கோலையும் உபயோகித்து அடுத்தவருடமுடிவிற்றான் கடுதாசி செய்யத் தொடங்கும். அதிலே வருடந்தோறும் 3,750 தொன்னுக்கும், 4,500 தொன்னுக்கும் இடைப்பட்ட புதினத்தாளும், எழுதுந்தாளும் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கடுதாசி செய்யத் தேவைப்படும் இலுக்புல் போதியமட்டும் கிரமமாகக் கிடைக்கத்தக்கதாய் 1,300 ஏக்கர் முடிக்குரியநிலம் அங்கு துப்பரவாக்கப் பட்டிருக்கிறது. அடுத்த மழைகாலத்தில் இதில் அப்புல் உற்பத்திசெய்யப்படும். வருடம் ஒன்றுக்கு 3,800 தொன் இலுக்புல்லும், 3,800 தொன் வைக்கோலும் தொழிற்சாலைக்குத் தேவைப்படும். இன்னும் அதிலே காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலைக்கென்று சுமார் 20லட்சம் சீமெந்துச் சாக்குகளுக்குத் தேவையான கிறுவ்த்தாளும் செய்யப்படும்.

## ஆடம்பர உடைகளின்பலன்

பட்டினங்களிலிருந்து பட்டுகள் பணிகள், சற்றின்கள்ஆதியாம் விலை உயர்ந்தஆடைகள் தரித்துக்கொண்டு கிராமக்கூட்டங்களுக்குச் சமுகமளிக்க வருகின்ற பெண்மணிகளைக் கிராமப் பெண்கள்சிலரின் கணவர்கள் பகைத்து ஆத்திரப்பட வேண்டியதாய் வரும்; ஏனெனில், அப்படியான விலைபெற்ற புதுச்சேலைகள் வாங்கித்தரும்படியாகப் பிறகு தங்கள்மனைவிமார்கள் தங்களை ஆக்கினைப்படுத்தக்கூடும் என்பதையிட்டு இவர்கள் அஞ்சுகின்றார்கள்; இவ்விதம் குடும்பசெலவுப்பாரத்தைக் குறைக்கத் துணைசெய்வதற்குப்பதில் இந்தப்பெண்மணிகள் சமுகமளிப்பதானது அவர்களின் செலவுபாரத்தைக் கூட்டுவதாகவே முடிகிறது எனப் பாராளுமன்றத்திலே சிலாபப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. எஸ். சி. ஷேர்லி கோறியாஅவர்கள் அங்கு நடைபெற்ற லங்கா மஹிலசாமித்திய சபைக் கமிற்றி மகாநாடொன்றில் பேசியபோது கூறியிருக்கின்றார்.

## ஜாயெலாப் பிரதிநிதி

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே ஜாயெலைப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான அரசவாசல்முதலியார் டி. பி. ஜயசூரியஅவர்கள்தான் சபைக் கூட்டங்களுக்குத் தவறாதுகிரமமாகச் சமுகங்கொடுப்பதில் ஏனையபிரதிநிதிகளைக்காட்டிலும் முதன்மைஸ்தானம் வகித்திருக்கின்றார். இவர் பழைய சட்டநிருபண, அரசாங்கசபைகளிலே 23 வருடகாலம் சபைப்பிரதிநிதியாகஸ்தானம்வகித்திருக்கின்றார். அரசாங்க சபையிலே இவர் கம்பகாப்பிரதிநிதியாய் இருந்துவந்தார். இவரைப்போன்று சமமாகத் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக, சேர் ஜோண் கொத்தலாவெல, திரு. ஏ. இரத்நாயக எனும்மூவரும் நெடுங்காலம் அச்சபைகளில் பிரதிநிதிகளாய் இருந்துவந்திருக்கின்றனர். ஆயினும் அவர்களில்எவராவது எந்தஒரு கூட்டத்துக்கும் தவறாது சமுகமளித்தவர்கள்அல்ல. தற்போது 71 வயசுடையவரான ஜாயெலைப்பிரதிநிதிஅவர்கள் இத்தனைவருடங்களிலும் ஒருகூட்டத்துக்குத்தானும் சமுகங்கொடுக்கத் தவறினவரல்ல. இதுகாலவரை இவரது தொகுதியிலுள்ள மக்களில்எவராவது அவர்வீட்டுக்குச்சென்று எத்தகைய முறையீடுஞ் செய்யாதவகையில் தமதுகடமைகளை இவர்ஆற்றிவந்தார். ஆனால், அரசாங்கம் அரிசிக்குஉதவிவந்த மான்யத்தைநீக்கியதையிட்டு மாத்திரம் சிலதினங்களின்முன் அவர்கள் இவரின்வீடுசென்று எதிர்பேசினார்களாம்.

## நாடு சங்கதிகள்

— இருஅமெரிக்க வைத்தியர்களான டக்றர் ஜோண் லோறெனஸ், டக்றர் ஜோண் றாசிக்எனும் இருவரும் ஆகாயவிமானத்திலே சென்ற சனிக்கிழமை யூகோசிலேவியாவைச் சேர்ந்த சாகிறெவ்நகர் வந்துசேர்ந்ததும் இரத்தசயபந்தமான ஓர்கடின நோய்கண்டு வருந்துகிறவரான கருதினால் ஸ்ரிபினக் ஆண்டவரைப்பற்றி அந்நாட்டு வைத்திய பேராசிரியர்களுடன் ஆலோசித்ததாகத் தந்திச்சமாச்சாரம் கூறுகின்றது.

— இந்தியாவிலே 20 லட்சம் பேருக்குமேற்பட்ட குருடர்கள் இருக்கின்றார்கள். அதாவது இவர்கள் தொகை ஆஸ்திறேலியாவின் குடிசனத்தொகையில் நாலில் ஒருபங்கு. ஒவ்வொருலட்சம்பேருக்கும் பெல்சியத்தில் 43 பேரும், ஜேர்மனியில் 60 பேரும், பிரித்தானியில் 175 பேரும், இந்தியாவில் 500 பேரும் குருடர்கள். இந்தியகுருடர்களில் ஆயிரத்தில் 6 பேர்தான் குருடர் ஸ்தாபனங்களில வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள்.

— தற்போது சீனத்தேசிய அரசாங்கம் இருந்துவருகின்ற போர்மோசாதீவில் அமிஎன்ற பூர்வீக சாதியினராய் ஏழாயிரம்பேர் இருக்கின்றார்கள். இவர்கள் முன்னர் மனுவேட்டைக்காரராய் இருந்தார்கள். இப்போதுமே இவர்கள் முகத்தில் பச்சைகுற்றுகிறார்கள். ஓர் சீனக்குருவாகிய வண. ஜோண் வென்சுவாமியார் கடந்த மூன்று ஆண்டுகளிலும் இவர்களிலே 400 பேரை மனந்திருப்பிக் கத்தோலிக்கராக்கியிருக்கின்றார்.

— காவலில்வைக்கப் பெற்றிருப்பவரான யூகோசிலேவியநாட்டுக் கருதினால் ஸ்ரீபினக்ஆண்டவர் இரத்தசம்பந்தமான நோய்கண்டு கடுமையாகச் சுகவீனமுற்றிருப்பதாலே அவருக்கு வைத்தியசிகிச்சை செய்வதற்கென்று இருஅமெரிக்க வைத்தியநிபுணர்கள் நியூயோக்நகரிலிருந்து சென்ற 24-ந் திகதி அந்நாட்டிற்குப் புறப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

— பிரித்தானியஅரசாங்க நாணயமடிக்குஞ்சாலை சென்ற 1952-ம் ஆண்டிலே பிரித்தானியசாம்பிராச்சிய நாடுகளுக்கும், பிறநாடுகளுக்குமாக 44 கோடிநாணயங்கள் அடித்துக் கொடுத்திருக்கின்றதாம். இவற்றிலே பத்தொன்பது பிறநாடுகளுக்குமாக 77 இனமான நாணயங்கள் அடிக்கப்பட்டுள்ளன. இவற்றாலே பிரித்தானியஅரசாங்கம் 14 லட்சம்பவுண் வருமானம் பெற்றிருக்கிறது.

# ஜோர்ஜியாவின் தவப்புதல்வன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத நட்டம் எமக்கிடையே குழப்பத்தையும், ஒழுங்கீனத்தையும் உண்டுபண்ணுமேயெனச் சோவியற்விரோதிகள் கணக்கிடுகிறார்கள். ஆனால், அவர்களை மோசமான ஓர்ஏமாற்றமே காத்திருக்கிறது.'' இது சென்றபங்குனி மாதம் 9-ந் தேதி பேறியா மொழிந்தது. இப்போது இதேபேறியாவைத்தான் மலெங்கொவ் தலைமையிலுள்ள சோவியற்அரசாங்கம் "இராசாங்க துரோகி" என்று சிறைக்குள்ளே தள்ளியிருக்கிறது. பேறியாவின் வழக்கு சோவியற் சுப்பிறீங்கோட்டில் விசாரணை செய்யப்படுமென்பதாகச் சொல்லப்படுகிறது. இது 'சட்பட்'டென்று முடியாது. எப்படியும் தன்மீது சாட்டப்படுகின்ற குற்றங்கள் யாவற்றையும் தானேசெய்ததாகப் பேறியா சடுதியில் 'ஒப்புக்'கொண்டுவிடலாம். இதற்குமுன் கைதிகள், குற்றச்சாட்டுகளை 'ஒப்புக்'கொள்ளச்செய்ய இவரே கற்றுக்கொடுத்த உபாயங்கள் இவர்அறிந்தவைதானே? அத்தோடு ஆள்வேட்டையில் தனக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருந்ததோ அவ்வளவ சாமர்த்தியம் மலெங்கொவுக்கு உண்டுஎன்பதையும் பேறியா நன்குஅறிந்தள்ளவர்.

## பிரியாவிடை விழா

சென்ற 24-7-53 வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டைக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் விசாரணைப்பங்குக்குருவர் வண. வி. ஆர். தார்சிசியஸ் சுவாமி அவர்கட்கு ஓர்பிரியாவிடைவைபவம் நடாத்தினர். அன்று பி.ப. 5மணிக்குச் சுவாமிகளை மாணவரும், ஆசிரியரும்; கிறீஸ்தவர்களும் துவசதோரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற வீதியூடே வாத்தியவரிசைகளுடன் அழைத்துச்சென்று உயராசனத் தமரச்செய்யவே ஓர் மாணவியால் பூமாலைசூட்டப்பட்டது. பாடகர்குழாம பிரியாவிடைப் பாக்கள் படிக்க, மாணவர்ஒருவர் பிரியாவிடைப் பத்திரம்படித்துக்கொடுத்துத் துயர் தெரிவித்தனர். பின்னர் கி. க. தலைவர் முகாந்திரம் வி. மகேசன் அவர்கள் தலைமையிலே ஆசிரியர் எஸ். யோர்ஜ் அவர்களும், பகுதிவித்தியாதரிசி வி. துரைசிங்கம் அவர்களும் சுவாமியவர்களின் பத்து வருடசேவையை எடுத்துக் கூறி நன்றிப்பாடு உணர்த்தினர். வித்தியாதரிசியவர்கள் சுவாமிபாரிடம் சக்தி, சித்தி, ஆனந்தம் மூன்றும் நிறைவாய் அமைந்துள்ளனவெனக் கூறினார். அதன்மேல் தலைவர் அவர்கள் இப்பகுதிக் கிராமங்கட்கும், பாடசாலைகட்கும் சுவாமிகள்செய்த சேவைகளைப்பாராட்டிக் கிராமமக்களின் சார்பாக நன்றிகூறினார். பிரியாவிடை நாயகர் எழுந்து யாவர்க்கும் நன்றி கூறியதுடன் வரப்போகும் விசாரணைக்குருவானவர்க்கும் அன்பும் அமைசலும் காட்டும்படி வேண்டிநின்றார். கடைசியாகத் தலைமையாசிரியர் யாவர்க்கும் நன்றியுரைசமர்ப்பித்ததும் பிரியாவிடைநாயகர் திருக்கரஆசீர்கூறிப் பிரியாவிடைபெற்றேகினார்.

— நிருபர்

— வடகோறியாவிலே கம்யூனிஸ்த தலைமைப்பதவி வகிக்குமாறு ருஷியாவுக்குச்சார்பான கட்சிக்கும், சீனாவுக்குச் சார்பானகட்சிக்குமிடையே ஓர் போராட்டம் நடைபெற்றுவருகின்றதாம். இதிலே காலங்கண்ட கம்யூனிஸ்தர்ரான கிம்ரூபொங்என்பவர் தலைமையிலுள்ள சீனச்சார்பானகட்சியே பலமடைந்துவருவதாகச் செய்திபரந்திருக்கிறது.



# பாலர்  பக்கம்



## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

எங்கள் உள்ளத்தில் இருக்கும் இஷ்டப் பிரசாதத்தின் வழியாய் நாம் தேவ இராச்சியத்தை எம்மில் கொண்டிருக்கிறோம்.

சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட கடுகுவிதை போல, இஷ்டப்பிரசாதம் முதன் முதல் கொடுக்கப் படுகிறபோது மிகச் சிறிய விதையாய் இருக்கும். ஆனல், நாங்கள் ஒத்துழைத்து அது வளர இடங்கொடுத்தால், அது பாரிய விருட்சமாய் ஓங்கி வளர்ந்து, இஸ்பிரீத்து சாந்துவின் மிகவும் அழகான ஞானக் கனிகள் நிறைந்திருக்கும்.

மெய்யாகவே ஒருவன் தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வரப்பிரசாதத்தையும் — ஆகச்சிறியவைகளையுங் கூட அவதானித்து, அவைகளின் இன்பமான அழைப்பிற்கு இணங்கிப் பின்பற்ற முயற்சிப்பானேயாகில் தான் எவ்வளவு தூரம் சுத்தவாளனுகி விட்டான் என்று கண்டு ஆச்சரியப் படுவான். அவனுடைய ஆத்துமத்தில் எரியும் தேவநேச அக்கினி பிறமனிதரிலும் பற்றிஎரியவே, அவன் அநேக ஆத்துமாக்களை யேசுநாதரிடம் கொண்டுவந்து சேர்ப்பான். ஏனெனில், அவனிடமுள்ள நன்மைத்தனத்தின் கவர்ச்சியை எதிர்க்க முடியாமற் போகும். இதேவிதமான தேவநேசம் அவனுடைய சகல நடபடிகளிலும் காணப்படும்.

தேவ வரப்பிரசாதம் உள்ளவன் சருவேசுரனுக்கும் பிரியமுள்ளவன்; பிறமனிதருக்கும் அருமையானவன். ஆ! வரப்பிரசாதத்தின் வல்லமை, மகிமைதான் என்னே! தேவன்தாமே அவனிடத்தில் வாசமாய் இருக்கிறர்.

நாம் நாடோறும் அநேக வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆயினும் அவைகளை உபயோகிக்கத் தெரிந்தவனே சுத்தவாளனுவான்.

ஆகையால், தம்பி, தங்கைமார்களே நாம் இருந்தாற்போல் சடுதியாய் ஒருபெரிய புண்ணியத்தைச் செய்து அர்ச்சியசிட்டர் ஆகமாட்டோம். அர்ச்சியசிட்டதனம் சின்னச்சின்னக் கடமைகளைத் திறமாயும், பிரமாணிக்கமாயும் செய்வதிலேயே அடங்கும்.

வணக்கம்

உங்கள் அன்புள்ள

அண்ணு

## நல்லாரைச் சேர்

1. கொல்லும் புலியை யாரேனும்
கொஞ்சிக் குலாவல் உண்டோசொல்?

2. கண்ணைத் தோண்டுங் கரடியினைக்
கட்டித் தழுவல் கண்டாயோ?

3. சீறிப் பாயுஞ் சிங்கத்தைச்
சிநேகஞ் செய்யச் செல்வாரோ?

4. பாலைச் சொரியும் பசுமீது
பட்சம் வைத்து வளர்ப்பார்கள்

5. ஆட்டின் மீதும் எல்லோரும்
அன்பைக் காட்டி அணைத்திடுவார்.

6. நல்லவ ரைத்தான் உலகினிலே
நண்பர்க ளாகத் தேடிடுவாய்.

7. தீயவர் தன்னைக் சேராதே.
தீயென எண்ணி விலகிட.

'ஜெயம்'

## செமனெறியில் ஓர்நாள்

ஒவ்வொரு வருடமும் நூற்றுக் கணக்கான இளம் பையன்கள் தங்கள் இல்லத்தையும், குடும்பத்தையும் விட்டு செமனெறிபோய்ச் சேருகிறர்கள். இவர்கள் எப்படி அங்கு போகத் துணிகிறர்கள்?

சம்மனசானவர் ஒருவர் தோன்றி "நீ ஒரு குருவாக வரவேண்டும்" என்று சொல்லுகிறரா? இல்லை, இல்லை. அப்படியானல் ஏதாவது புதுமை நடக்கிறதா? அதுவும் இல்லை. இல்லையானல் பின்னர் நடப்பது யாது?

இவர்களிடம் சிலபல அறிகுறிகள் காணப் படுகின்றன.

1. கடவுளுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என விரும்புகிறன்.

2. அந்தச் சீவியத்தை நடத்துதற்குத் தேவையான சுகதேகியாய் இருக்கிறன்.

3. படிப்பில் கூடிய தேர்ச்சி அடைந்து வருகிறன்.

4. தேவபக்தி உடையவனுய்க் காணப்படுகிறன்.

இவர்கள் அங்கு போய் என்னசெய்கிறர்கள்? செமனெறியில் உள்ள பிலிப்பு என்னும் பையனை விசாரிப்போம்,

எங்களுடைய நாள் திவ்வியபூசையுடன் தொடங்குகிறது. ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் வகுப்பு அறையில் செலவிடுகிறோம். மத்தியானத்தில் ஓய்வு நேரம் கிடைக்கிறது. சாயந்தரவேளையில் பந்து அடித்து விளையாடுவோம். உங்களைப்போலவே எங்களுக்கும் நத்தார். பெரிய திருநாட்களில் எங்கள் குடும்பத்தாரைச் சந்திக்க உத்தரவு கிடைக்கும். எங்களுடைய சீவியம் யேசுநாதருடனே. இன்னும் அதிகம் அப்போஸ்தலர் தேவை. நீங்களும் அறுப்புக்கு எசமானை மன்றுடுங்கள்.

எம். ஜே. எம்.

## எப்படிப் பறக்கலாம்?

நீல வானத்திலே பட்டங்கள் போட்டி யிட்டுப் பறந்துகொண் டிருந்தன. பால்போன்ற வெள்ளைக் கொக்கு ஒன்று பட்டங்களுக்கு மேலாகப் பறந்துகொண் டிருந்தது. இந்த ஆனந்தமான காட்சியை வீட்டின் மேல்மாடியில் இருந்து கண்ணிமையாமல் பார்த்துக் கொண்டு நின்றுள் பவானி.

"அம்மா! பவானி!!" என்று அன்போடு அழைத்தாள் அவள் தாய்.

"இந்த அழகான சிவப்புச் சட்டையைப் போட்டுப்பார்" என்று சற்று முன்பு தான் தைத்து முடித்த சட்டையைப் பவானியிடம் கொடுத்தாள் தாய்.

"அம்மா எனக்குச் சிவப்புச் சட்டை வேண்டாம். இரண்டு வெள்ளைச் செட்டைகள் தைத்துத் தாருங்கள்" என்று கனிவோடு கேட்டாள் பவானி.

"செட்டைகள் உனக்கு எதற்கு அம்மா?" என்று செல்லமாகக் கேட்டாள் தாய்.

"அந்தப் பட்டங்களுக்கு மேலே உயரப் பறக்க வேண்டும்" என்று நீல வானைச் சுட்டிக் காட்டினுள் பவானி. பவானியின் பேச்சைக்கேட்டுத் தாய் சிரித்தாள்.

"பட்டங்களுக்கு மேலே பறந்து எங்கே செல்வாய்?" என்று கேட்டாள்தாய்.

"உயர்ந்த மலைகளின் உச்சிக்குப் போவேன்" என்றுள் பவானி.

"அதன்பிறகு என்ன செய்வாய்?" என்றுள் தாய்.

"மேகங்களோடு பறந்து நட்சேத்திரங்களோடு விளையாடுவேன்" என்றுள்.

"இவ்வளவு தானு? மோட்சத்துக்குப் பறந்துபோக மாட்டாயா பவானி" என்று வினுவினுள் தாய்.

"ஆம், மோட்சத்துக்கும் கூடத் தான் போவேன்" என்று துள்ளிக் குதித்தபடியே பவானி பதில் சொன்னுள்.

"இந்தச் செட்டைகளோடு மோட்சத்துக்குப் பறந்து போக முடியாது பவானி."

"அப்போ எப்படி அம்மா மோட்சத்துக்குப் பறக்க முடியும்?"

"நேற்று உன்னுடைய பட்டம் உயரப் பறந்து செல்ல மறுத்ததே, ஏன்?"

"பட்டத்தின் வால் பாரமாக இருந்தது அம்மா."

"அப்போது என்ன செய்தாய் பவானி."

"பட்டத்து வாலின் பாரத்தைக் குறைத்தேன். அவ்வளவுதான், பட்டம் இலகுவாக உயரப் பறந்தது அம்மா.

"நீ மகா புத்திசாலி. அதைப்போல நாமும் மோட்சத்துக்குப் பறக்க வேண்டுமென்றல், நமதுபாரமும் குறையவேண்டும். அதாவது, பாவம் குறையவேண்டும். பாவங்கள் மிகவும் கனம் உள்ளவை. அவை எங்களை மோட்சத்துக்கு எழும்பிப் பறக்க முடியாதபடி தடுத்து விடுகின்றன. நரகத்துள் அமிழ்த்தி விடுகின்றன குழந்தாய்.

"அம்மா! பாவம் அவ்வளவு பொல்லாததா? அப்படியானல் சிறுபாவத்தைத்தானும் இனி ஒருபோதும் செய்யேன். ஆனல், செட்டை இல்லாமல் எப்படி அம்மா மோட்சத்துக்குப் பறக்கமுடியும்?"

"பவானி! என் கண்ணே! நல்ல கேள்வி கேட்டாய். ஆம், நாம் மோட்சத்துக்குப் பறக்கச் செட்டைகள் வேண்டும். ஆண்டவருடைய வரப்பிரசாதங்கள் என்ற செட்டைகளால் மோட்சத்துக்கு இலகுவாகப் பறக்கலாம்."

"அம்மா அந்தச் செட்டைகளை எப்படி பெறமுடியும்?"

"அப்படிக் கேள் பவானி. அந்தச் செட்டைகளைச் செப, தான, தருமங்கள், ஒறுத்தல் முயற்சிகள் ஆகியவற்றைக் கொண்டு செய்யவேண்டும்."

"அம்மா! அம்மா!! இன்றைக்கே அவைகளைச் செய்து மோட்ச செட்டைகளை ஆக்குவேன்" என்றுசொல்லி பவானி ஆனந்தித்தாள்.

அன்று தொட்டு பவானி தினசரி கோவிலுக்குச் சென்று பக்தியாய்ப் பூசைகாண்கிறுள். திவ்வியநன்மை பெறுகிறுள். அடிக்கடி சிறு சிறு செபங்கள் சொல்லுகிறுள். ஒறுத்தல்கள் செய்கிறுள். அவளது மோட்ச செட்டைகள் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வருகின்றன.

சகோதரங்களே! நீங்களும் மோட்சத்துக்குப் பறந்துசெல்வதற்கு இன்றே ஞானச் செட்டைகளை வளர்க்கப் பவானியைப் பின்பற்றுங்கள்.

'போன்'

## இவள் யாரோ?

1

மாமலையாம் லூர்தினிலே
மகிமையான காட்சியிலே
பாலகியாம் பெர்னதெத்துப்
பார்த்துமகிழ் அன்னையாரோ?

2

போர்த்துக்கால் தேயத்தினில்
புண்யதிரு சேத்திரத்தில்
மாசில்லாத பாலர்கண்டு
மகிழ்ச்சிகொண்ட மாதாயாரோ?

3

பகருகிறேன் பாலகரே!
பாக்யவதி யாரெனவே
செகதலமே போற்றுகின்ற
தேவமரி அன்னைதானே.

— ஜோ. ஏ. எம். தாஸ்

(அடுத்த பக்கம் பார்க்க)

# பொது வர்த்தமானம்

### கைதிகளாயிருககும் ருஷியர்கள்

ஹென்றிக் சம்பார்ஸ்கிஎனும் 20 வயசுடைய போலிஷ்காரர் சைபீரியாவிலுள்ள அடிமைகள் முகாம்ஒன்றில் இருந்து பார்சியாவுக்குத் தப்பியோடி வந்திருக்கின்றார். 35,000 கைதிகள் ஆடுமாடுகளைப்போல் அடைபட்டிருக்கும் அடிமைமுகாம் ஒன்றிலிருந்தே இவர் வந்திருக்கின்றார். இவர்களிலே முன்னர் சோவியற்ருஷியாவில் உயர்ந்த அதிகாரபதவிகள் வகித்திருந்த சில ருஷியர்களும் இருப்பதாக அவர் கூறுகின்றார். கலினின்என்ற பெரிய சோவியற் ஜெனறலையும், முன்னர் போலாந்தஅரசினிடமாய் வார்சோநகரில் ருஷிய ஸ்தானிகரின் பரிவாரத்தினருள் சோவியற்இராணுவ ஆலோசகராயிருந்த கோர்ணல் ஸ்ருக்கா ரொறல் என்பவரையும், மற்றும் அநேக விசேஷப்பட்டமனிதரையும் அங்கு தான் கண்டதாக அவர்கூறுகின்றார்.

### பூர்வீக இந்தியகுடிகள்


தென்னமெரிக்காவைச்சேர்ந்த பிறேசில்நாட்டிலே பாம்புகள்நிறைந்த ஓர் காட்டின்மத்தியிலே . வண. தோமஸ் றிகார்டோ எனும் கத்தோலிக்ககுருவானவர் நீலக்கண்களையும், றோசாப் புஷ்பங்கள் போலும் சிவந்தகன்னங்களையுமுடைய ஓர் பூர்வீக இந்திய சாதியினரை நவமாகக்கண்டறிந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. போசியன்என்ற இந்தச்சாதியினரை அவர் றையோ முகாஜாய் எனும்பகுதியில் கண்டுபிடிக்கலாயினர். தங்கள் முகரூபத்திலே இவர்கள் வடஇந்தியர்களையும் ஜேர்மனியரையும் ஒத்திருக்கிறார்கள்; சகலருமே நிர்வாணிகளாய் இருக்கின்றார்கள்; நாலு தூண்கள் கொண்டு தங்கள்வீடுகளை இவர்கள் கட்டி நான்குபக்கமும் திறந்தவெளியாயிருக்க விட்டிருக்கிறார்கள்; இவர்கள் பாவிக்கும் ஆயுதங்கள் கற்கள்கொண்டு செய்யப்பட்டன; வெட்டாயுதங்களாக இவர்கள் ஆண்பன்றிகளின் பெரியபற்களை உபயோகிக்கிறார்கள்; இவர்களின் உணவுகாட்டுமாமிசமே; விசேஷமாய்க் குரங்கு, மான், பட்சிகளின்மாமிசமே; இவர்களின் கமத்தொழில்முறை சரித்திரகாலத்துக்கு முற்பட்டது என்பனவாகச் சுவாமியார் அறிவித்திருக்கின்றார், கோர்ணல் அடல்போஎன்ற பிரபல தேசஆராய்ச்சியாளரும் இவருடன்சென்றிருந்தார்.

### குருட்டுப்பெண்ணின் அதிர்ஷ்டம்

அன்றுஓர்நாள் ஆஸ்பத்திரிஒன்றிலே மேரி டன்ஸ்ரன்எனும் ஓர்அமெரிக்க மாது மரணத்தறுவாயில் இருந்தாள். "எனதுகண்களை ஓர் குருடருக்குக் கொடுங்கள்; அப்போது நான்பார்க்கக் கூடியனவாய் இருந்தவைகளையெல்லாம் அவைகள்பார்க்கும்" என்று சாகுமுன் நடுச்சாமத்தில் கூறினாள். ஆஸ்பத்திரி அதிகாரிகள் அவளுடைய விருப்பத்துக்கிசைந்து கண் வைத்திய நிபுணரை அழைத்தனர். கண்வைத்திய சிகிச்சைக்குத் தகுதியானஒருகுருடரை நாடுமுழுவதும் தேடினர். நேரம் மிகச்சொற்பமாய் இருந்தது. அந்த மாதும் இறந்துவிட்டாள். 72 மணி நேரத்துள் அவளுடையகண்கள்இரண்டும் பெயர்க்கப்பட்டு மற்றொருவருடைய கண்களில் பொருத்தப்பட வேண்டும். கடைசியாக 200 மைல் தூரத்திற்கப்பால் 18 வயதுடைய ஓர் இந்தியபெண் கண்டறியப்பட்டாள். அவள்பிறவிமுதல் குருடியாயிருந்தாள். உடனேகண்வைத்திய நிபுணர் இறந்த அம்மாது அளித்த நன்கொடையைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு தமது பிரத்தியேக ஆகாய விமானத்தில் பறந்துசென்று அக்குருட்டுப் பெண்பிள்ளை வசித்தஇடத்தைச் சேர்ந்தார். முழுச்சத்திரவைத்தியமும் ஒரு மணி நேரத்தில் சித்திகரமாக முடிந்தது. இப்போது அவள்நன்றாய்ப்பார்க்கிறாள். அந்தமாதின் கடைசிவிருப்பம் இவ்வாறுநிறைவேறியது.

பாலர் பக்கத் தொடர்ச்சி

## உச்சி அடி




பிள்ளைகளே! 1-ம் படத்தைப் பாருங்கள். வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு கூலிக்காரனைக் காண்கிறீர்கள். அவன் கம்பத்தை நிறுத்தி அது உறுதியாக நிற்கத் தக்கதாய் ஆணிஒன்றை வைத்து அறைந்துகொண்டிருந்தான். அந்தப் பெரிய ஆமாரால் ஓங்கி ஓங்கி அடித்தான். அடியின் அதைப்பினால் அவன் கைகள் வலித்தன. வேதனையோடு கைகளைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

2-ம் படத்தைப் பாருங்கள். பணத்தைச் சுளை சுளையாக எண்ணிக் கொடுக்கும் எசமான் அந்தக் கூலிக்காரன் எப்படி வேலை செய்கிறான் என்பதைப் பார்க்க இடைநேரத்தில் ஒரு மேற்பார்வை போட்டார். "காகம் இருக்கப் பனம்பழம் விழுவதை"ப்போல எசமான் வரும் சமயத்தில்தான் கூலிக்காரனும் கைசலித்து நின்றான். கையும் மெய்யுமாகக் களவைக் கண்டுபிடித்த பெருமையோடு எசமான் ஒருஏளனச் சிரிப்புச் சிரித்தார்.

3-ம் படத்தைப் பாருங்கள். எசமானைக்கண்ட ஏக்கத்தில் கைவலியை மறந்து ஆணியை அறைவதற்காகத் தன் முழுத் தைரியத்தையும் சேர்த்து ஆமாரைத் தலைக்குமேலே வேகமாக ஓங்கினான். "டபார்!" என்று ஓர் சத்தம். உல்லாசமாகப் பார்த்துக்கொண்டு பின்புறமாக நின்ற எசமானுக்கு உச்சி பிளந்தது. உலகம் சுழன்றது. 'ஐயோ' என்று அலறினார். உடனே திரும்பிப் பார்த்தான் கூலிக்காரன். தொப்பி வைத்திருந்த துரையின் தலை சப்பையாகப் போனதை அப்போதுதான் கண்டான்.

4-ம் படத்தைப் பாருங்கள். கூலிக்காரன் குடல் தெறிக்க ஓடுகிறான். உடம்பை அசைக்க முடியாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டார் எசமான். தொப்பியைக் காணவில்லை.

## முதியவரின் பொன்மொழி

ஒருமுறை ஓர் விருத்தாப்பிய மனிதரோடு பேசிக்கொண்டிருந்த ஒரு வாலிபன் தான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் சொற்பம் என்று கூறினான். அதைக் கேட்ட விருத்தாப்பியர் மிகவும் அதிசயித்து: "ஆ, இந்த முதிர்ந்த வயசிலும் நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாய் இருக்கின்றன. அவைகள் எவையெனில், நான் நாள்தோறும் இரண்டு இராசாளிகளை அடக்கவேண்டும். ஒரு சிங்கத்தைச் சங்கிலியால் கட்டி, அதன் போக்குக்கு விடாமல் பாதுகாக்க வேண்டும். இரண்டு கருடப் பட்சிகளை நடத்தவேண்டும். இரண்டு முயல்களை ஓடவிடாமல் பாதுகாக்க வேண்டும். ஒரு பாம்பை அடக்க வேண்டும். ஒரு வியாதிக்காரனை எப்பொழுதும் பராமரிக்க வேண்டும்" என்றார்.

வாலிபன் இதைக்கேட்டு மிகவும் பிரமித்து: "ஐயா! நீர் சொன்னது எல்லாம் விளையாட்டுப் பேச்சாக இருக்கின்றதே. ஓ, இவைகளை எல்லாம் ஒருமிக்கச் செய்வது கூடாதே" என்று சொன்னான்.

அப்போது அந்த விருத்தாப்பியர்: "நான் சொன்னது விளையாட்டு அல்ல, நிச்சயமானதே. இரண்டு இராசாளிகளை அடக்க வேண்டும் என்று சொன்னேன் அல்லவா? அவைகள் என்னுடைய இரண்டு கண்களே. அந்தக் கண்களால் என்னை மோசப் படுத்தக்கூடிய எதையும் நான் பாராமல் கருத்தாய் விலக்க வேண்டும். சிங்கம் என்றது என் இருதயமே. அது பாவத்தை நாடாதபடி தடுக்க வேண்டும். கருடப் பட்சிகள் என்று நான் சொன்னவைகள், எனது இரண்டு கைகளே. அவற்றால் பிறருடைய பொருட்களைச் சூறையாடாது எனக்கும், என் குடும்பத்துக்குமாக வேலைசெய்ய அவற்றைப் பாவிக்க வேண்டும். நான் சொன்ன முயல்கள் இரண்டும் என் கால்களே. அவைகள் முயலிலும் மகா தீவிரமானவை. அவைகள்பாவத்தின் வழிகளில் செல்லாதபடி தடுக்க வேண்டும். சர்ப்பம் என்று நான் சொன்னது என் நாவையே. நாவிலிருந்து புறப்படும் அசத்திய மொழிகளும், மூர்க்கமான பேச்சுகளும் தூஷணைகளும் பாம்பின் விஷத்திலும் மகா தீயன. அப்படியான தீமையுள்ள பேச்சுகளைப் பேசாதபடி என் நாவைக் காத்துக் கொள்ள வேண்டும். என் தேகத்தையே வியாதிக்காரன் என்று சொன்னேன். அதை அனுதினமும் கவனமாய்க் காத்துப் போஷித்து வர வேண்டும்." என்றான்.

முதியவர் சொன்ன இவ்விடையைக் கேட்டதும் அந்த வாலிபன் ஆச்சரியம் அடைந்தவனாய் அதனை ஓர் பொன்மதியாக ஏற்று அவருக்கு நன்று கூறினான்.

அ. ஜெயமேரி கிரேஸ் குருஸ்
வெற்றிநாயகி பெண்பாடசாலை
பேசாலை



## உங்களுக்குத் தெரியுமா?

**1.** தாம்கட்டியெழுப்பிவந்த பாரிய ஆசனக்கோவிலின் நிலவறையிலே தமக்கென்று ஓர் கல்லறையையும் அமைத்திருந்து, சமீபத்திலே மரித்தபின் அதில் அடக்கஞ் செய்யப்பெற்ற அதிமேற்றிராணியார் யார்?

இங்கிலாந்திலே லிவர்ப்பூல்நகர் அதிமேற்றிராணியாராய் விளங்கியிருந்த றிச்சேட் டவுணி ஆண்டவரே.

**2.** ஓர்காலம் பிரஸ்தாபம்வாய்ந்த புறொட்டஸ்தாந்தராய் விளங்கிய கருதினால் நியூமன் ஆண்டவரைக் கத்தோலிக்கதிருசசபையில் சேர்த்தவர் யார்?

ஆசா. டொமினிக் பார்பெறி சுவாமியாரே.

**3.** கமக்காரரின் பாதுகாவலர்களான அர்ச்சியசிஷ்டர்கள் யார்?

அர்ச். ஜோர்ஜும், அர்ச். இசிதோரும்.

**4.** தோட்டக்காரரின் பாதுகாவலர் யார்?

அர்ச். டொறோத்திஅம்மாள்.

**5.** கடற்தொழிலாளர்களின் பாதுகாவலர் யார்?

அர்ச். அந்திரே (பெலேந்திரர்)

**6.** தேவதாயார் பூலோகத்திலிருந்து பரலோகத்துக்கு ஆரோபணமானஇடம் தன்அகத்தேதான் இருப்பதாக எந்தெந்தநகர்கள் உரிமை பாராட்டிவருகின்றன?

எப்பேசுஸ்நகரும், ஜெருசலேம்நகருமாகும். அதனால் தேவதாயாரின் மோட்சாரோபணத்தின் பேரால் ஒன்றுக்குப் பதில் இரண்டுஇனத் தபால் முத்திரைகளைத் துருக்கிய அரசாங்க தபால்அதிகாரிகள் பாவனைக்குவிடுக்கவிருக்கின்றார்கள். இவைகள் வருகிற ஆவணி 15-ந் திகதிமுதல் எப்பேசுஸ் நகரில் ஒன்றும், ஜெருசலேமில் மற்றொன்றுமாக வெளிவரவிருக்கின்றன.

**7.** உலகில் வத்திக்கான் இராச்சியத்திற்கு வெளியே தனது குடிசனங்களையெல்லாம் நூற்றுக்குநூறுவிகிதம் முற்றாகவே கத்தோலிக்கராகக் கொண்ட நாடுஎது?

அன்டொறாஎன்ற குடியரசுநாடேயாகும். இது 5,231 குடிசனங்களைக் கொண்டது. இத்தனைபேரும் கத்தோலிக்கரே.

**8.** உலகில் தனதுகுடிசனங்களுள் நூற்றுக்குத் 90 விகிதத்துக்குமேல் கத்தோலிக்கரை அடக்கியுள்ள நாடுகள் எவை?

வடஅமெரிக்காவிலே பிரான்சுக்குச் சொந்தமான இரண்டேயிரண்டுஇடங்களான பியேறே-மிக்குவெலன் தீவுகள், ஸ்பெயின், இத்தாலி, வாலிஸ்-புற்றூனா என்ற தென்பசுபிக்சமுத்திர தீவுகள், எல்சல்வடோர் என்ற மத்திய அமெரிக்க குடியரசுநாடு, மோல்த்தா தீவு, லக்செம்பேர்க்நாடு மேற்கு இந்திய தொமினிக்கன் குடியரசுநாடு, கலம்பியா என்பனவே.

**9.** ஜேர்மனியின் அப்போஸ்தலராகவிளங்கிய ஆங்கில அர்ச்சியசிஷ்டர்யார்?

அர்ச். பொனிப்பாசியார். இவர் பரமபதமடைந்த பன்னிரண்டாம்நூற்றாண்டுவிழா அடுத்தவருடம் ஜேர்மனியிலே புல்டாநகரில் கொண்டாடப்படவிருக்கிறது.

**10.** தான் கத்தோலிக்கசமயத்தில் சேர்வதாகப் பாசாங்குபண்ணிய ஓர் பெண்ணால் சதிமானமாகக் காட்டிக் கொடுக்கப்பட்ட ஆங்கிலவேதசாட்சியார்?

மூத். எட்வாட் ஜோன்ஸ்.

## வாழ்க்கை வானில்

### ஆடு நனைகின்றதென்று........!

அரிசிவிலையை ஏற்றிவிட்டது அரசாங்கம்; இதற்கெதிராக அரசாங்க கட்சியினரே எழுதியிருக்கிறார்கள்; இடிமுழங்கப் பேசியிருக்கிறார்களென்றால் யார்தான் இந்தவிலையேற்றத்தை ஆட்சேபிக்கமாட்டார்? ஆனால், அரசியற்காற்றைச் சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் ஒருகட்சியினருக்கென்றால் இந்தத்தருணம் அந்திபகல அருந்தவ மிருந்தெடுத்த தருணம் போலாய்விட்டது.

நாடெங்கும் மாபெருங்கூட்டம். ஊர்வலம். இந்தவகையிலே கைதேர்ந்தவர்களாகையினாலே ஓடோடியும் ஊர்வலம் வைக்கின்றார்கள். உரத்த கண்டனக்கூட்டம் வைக்கின்றார்கள். மக்களுக்கும், இது ஒருஉசாரைக் கொடுக்கின்றது. அரிசி விலையைக் குறைக்கத்தானே இந்தக்கூட்டத்தவர்கள் முழங்குகின்றார்கள் என்று கும்பல்கும்பலாகக் கூட்டத்திற்குப் போகிறார்கள். 'கோவிந்தா'ப் போடுகிறார்கள்.

* * *

### யார் கமக்காரன்........?

'நாங்கள் ஏழைக் கமக்காரர்கள்' என்று நாலாங்கட்டைச் சுதியிற் பழையபல்லவி பாடினார் புரட்சிக்கட்சி மேடைப் பேச்சாளர்—இவரது நண்பர்கள்—இவரது உண்மை வாழ்க்கையை அறிந்தவர்கள் கூட்டத்திற் சமுகமளித்தார்கள் — இவரது பேச்சைக்கேட்டு ஆச்சரியமடைந்தார்கள் — இவரது பேச்சு வீண்வாய்வீச்சென்று உள்ளதை உள்ளபடி கண்டு முடிவுக்கு வந்துவிட்டார்கள்—காரணம், பேசினவர் ஏழையுமல்ல, கமக்காரனுமல்ல. அப்படியானால் அவர்யார்?

### வாழ்க்கையிற் குபேரன்—
### (ஆனல்) வாயளவில் ஏழை?

விசை வண்டியிலோ......வானூர்தியிலோ அன்றிப் பயணஞ் செய்தறியார்! வீட்டிற்குள் உலாவும்பொழுது காலால் நடந்திருப்பாரன்றி மற்றெப்பொழுதும் வாகனங்களிலும் பல்லக்கிலும் உலவும்பேர்வழி.

மாதம் ஒன்றுக்கு உழைப்பதோ ஆயிரத்துக்குமேல், உண்பது கூழல்ல, (கூப்பன்) அளவு அரிசியல்ல, உள்ளவற்றுள் ஒப்பில்லாத் தரத்ததாம் ஊர் அரிசியும் — அறுசுவை உண்டியும். பருகுவது பானையில் நீரல்ல, பழஇரசமும், பிறநாட்டு வடிபானமும். இனி, உடுப்பது பழங்கந்தையல்ல, பட்டும் பருத்தியும். வாயில் மெல்லுவது பாக்கு வெற்றிலையல்ல, இனிப்புச் சிற்றுண்டியும்—வெள்ளைச் சுருட்டும். இருக்கும் இடம் இரண்டொரு குழிஅல்ல, பன்னூற்றுக்கணக்கான பரப்புத் தோட்டங்களும், மாட மாளிகைகளும். பார்த்தீர்களா? ஏழைக்கமக்காரனை?

### கனவிலும் கமத்தொழில்அறியாதவர்!

மேடையில்நின்று ஆடுவார், பாடுவார். ஏழைகளாகிய எங்களுக்கு—கை காய்க்க நீர்இறைத்து ஏர்பூட்டி உழவுதொழில்செய்து வாடித்தவிக்கும் எங்களுக்கு — எப்படி இருக்கிறது வேடிக்கை!

### இவர்களை ஏரிற்பூட்டினல் என்ன?

தெருத்தெருவாய், வீதிவீதியாய், மேடைமேடையாய்க் கண்டம் இருதுண்டாகக் கதறித்திரியும் இந்த ஏழைக் கமக்காரர்களைப் பத்துப்பரப்பு வயலைச் செய்துபாருங்கள் என்று கேட்க ஆளில்லையே. நாட்டிற்பஞ்சம் வந்தால் அதனை வாயால் ஓட்டிவிடலாமா? பஞ்சம்பஞ்சம்என்று பல்லவிபாடுவதா? அல்லது கழனியிற்சென்று உழவுதொழில்செய்து உணவுப்பொருளைத் தேடுவதா? தோழர்களே! எது உபயோகந்தரும் செய்கை?

(இ. சா.)

## Order Absolute in the First Instance

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No. 1631

In the matter of the Estate of the late Anna Maria Chellappah widow of Karthigesu Mariampillai Chellappah of Jaffna Town. Deceased.

Edwin Aloysius Mariampillai of Jaffna Town. Petitioner.

This matter coming on for disposal before Spencer Rajaratnam Esquire, District Judge, Jaffna, on the 2nd day of July 1953 in the presence of Mr. Vital A. Moses, Proctor, on the part of the Petitioner and the affidavit of the abovementioned Petitioner dated 2nd July, 1953 and the affidavit of the witnesses who signed the Last Will and Testament No. 1099 dated 3rd May 1952 attested by Vital A. Moses, Notary Public and the Notary who attested the said Last Will having been read.

It is ordered that the Will of Anna Maria Chellappah widow of Karthigesu Mariampillai Chellappah deceased dated 3rd May 1952 and attested by Vital A. Moses, Notary Public, under No. 1099 be and the same is hereby declared proved and Edwin Aloysius Mariampillai the Petitioner is the Executor named in the said Will and that he is entitled to have Probate of the same issued to him accordingly.

This 2nd day of July, 1953.

(Sgd.) A. SAMBANDAR,
District Judge.

Drawn by:
Sgd. Vital A. Moses,
Proctor for Petitioner.

### அர்ச். அந்தோனியார் திருநாள்
பெரியகட்டு

இத்திருநாள் வருகிற ஆவணிமாதம் 2-ந் திகதி கொண்டாடப்படும். இம்மாதம் 30-ந் திகதிதொடக்கம் ஆராதனைகள் நடைபெறும். கோவில் அருகாமையில் ஆடி 30-ந் திகதி தொடக்கம் ஆவணி 3-ந் திகதிமட்டும் றெயின்வண்டிகள் நிறுத்தப்படும்.

— இற்றைக்கு 132 வருடங்களின் முன்னே அமெரிக்காவிலிருந்து திரும்புகையில் லேடேறேஎனும் இடத்திற்குச்சமீபமாய்ச் சுமார் 30 தொன்தங்கத்துடன் ஆழிவாய்ப்பட்ட லாகொன்விடென்ரேஎனும் கப்பலைச் சுழிகாரர் கண்டுபிடித்திருப்பதாய் மேற்குப் பிரான்சிலிருந்து அறிவிக்கப்படுகிறது. இந்தக்கப்பல் 1821-ம் ஆண்டு நத்தால் திருநாளுக்கு முதனுள் ஆழிவாய்ப்படலாயிற்று.

— யப்பானியதீவுகளில் ஒன்றாகிய ஹொன்ஷூ தீவிலே பெருமழைபெய்த காரணமாக ஓசாக்கா நகருக்குத் தெற்கேயுள்ள மூன்று ஆறுகள் பெருக்கெடுத்துப் பெருந் தேசப்பரப்பை மூடிக் கொண்டமையாலே 600 பேருக்குமேல் மரணமடைய, வேறு 5,000 பேரை எங்கேயென்று காணவில்லையாம். ஹொன்ஷூ தீவிலே தற்போது 12,000 மக்கள் வீடுவாசலின்றி அந்தரிக்கிறார்களாம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்வியபாலகயேசுவின் இரக்கத்தினாலும், சதாசகாயமாதாவின் இடைவிடாத சலுகையினாலும், குடும்பத் தலைவரான அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின் விசேஷமன்றாட்டாலும் நான் வருந்திக்கொண்டிருந்த கொடியவியாதியிலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்பட்டு, தற்போது பூரணசௌக்கியத்துடன் இருக்கிறேன். இவர்களின் நாமம் எங்கும்புகழப்படுவதாக. நேர்த்தியைப் பிரசுரத்தால் பூர்த்திசெய்கிறேன்.

குருநகர் எஸ். என். யோசெவ்


# சிலோன்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வோரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய போலிஸி!
ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
போலிஸி!



தலைமை ஆபீஸ்: 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன்: 6241, 6242, 6243.

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நூரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருணகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா
தி சிலோன் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிட்.
கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும்:
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


### சுகாதார வார விழா

சென்ற 17-7-53 புதன்கிழமை மாலை பேசாலைபாத்திமாஆண்பாடசாலையிலே சுகாதாரவாரவிழா குதூகலமாக நடந்தேறியது. அதற்குப் பேசாலைக் கட்டளைக்குரவர், மன்னார் வைத்திய சுகாதார அதிகாரி; மன்னார்ப்பகுதி எஸ். ஆர். டி. ஓ.; ஆர். டி. ஓ; தலைமன்னார்— பேசாலைப்பகுதிச் சுகாதார பரிசோதகர், பேசாலைக் கி. ச. அக்கிராசனர், மற்றுந்திரளானமக்கள் சமுகமளித்திருந்தார்கள்.

முந்தமாணவர்களின் தேகப்பயிற்சி நடைபெற்றது. பின்னர் பாடசாலை மண்டபத்திலே 'பாடசாலைக் கீதம்' பாடப்பட்டபின் பெண்பாடசாலை மாணவிகளின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதனைத்தொடர்ந்து வைத்திய சுகாதாரஅதிகாரி பேசினார். அடுத்தபடியாக எஸ். ஆர். டி. ஓ. அவர்கள் பேசியபோது: நாம் புனிதமாகவும், ஒழுங்குடனும் காணப்படும் ஒருபிள்ளையை எங்கேயாவது சந்தித்தால், நீ யாருடையபிள்ளை? எங்கே படிக்கிறாய்? உன்ஆசிரியர் யார்? என்ற மூன்றுவினாக்களையும் வினவுகிறோம். அவ்விதமே இன்றுநான் இந்தப்பிள்ளைகளின் ஒழுக்கம், சுத்தம்என்பவைகளைக் கவனித்தமட்டில், இங்கேஆசிரியர்கள் எத்துணைதிறமையுடன் தொண்டாற்றுகிறார்கள், பெற்றவர்கள் எவ்வளவாகப் பொறுப்புணர்ந்து நடந்துகொள்கின்றனர் என்பதைக் கண்டுகொண்டேன்எனத் தெரிவித்து, பேசாலைமக்கள்பொதுசன ஊழிய கைங்கரியத்திலே முன்னணியில்நிற்பதாகப் பாராட்டி, "இலங்கையின் முதலாவதுஎதிரியாகிய க்ஷயரோகத்தை முறியடிப்பதில் சுத்தம், சுகாதாரமுறைகள் என்பனவற்றை ஆயுதமாகத் தாங்கவேண்டும்எனக் கூறினார்.

பின்பு, சுகாதார உதவிநிலையத்துக்கு ஒழுங்காகச்செல்லவே,வைத்தியஆலோசனைபெற்ற மூன்று தாய்மாருக்கும், சுகாதாரமுறையில் திடகாத்திரமாக வளர்க்கப்பட்ட மூன்றுகுழந்தைகளுக்கும் உதவிநிலையத்தால் பரிசுகள்வழங்கப்பட்டதும், பாத்திமாஆண்பாடசாலையில் சுகாதாரசம்பந்தமான கதம்ப நிகழ்ச்சிகளும், "நோயா அல்லது பேயா" என்ற சிறுநாடகமும் நடைபெற்றன. முடிவில், சுகாதாரபரிசோதகர் சுகாதாரவாரவிழாவைத் திறம்படநடத்திய ஆசிரியர்களைப் பாராட்டிப்பேசினார். பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. சிங்கராயர் அவர்கள் விழாவுக்குச் சமுகமளித்த சுகாதார அதிகாரிகள், பெரியார்கள், பொதுமக்களுக்குத் தமதுநன்றியைத்தெரிவித்துக் கொண்டதும்விழாஇனிதேமுடிவுற்றது.

### நேர்த்தியின் பூர்த்தி

எனதுதகப்பனுக்கு உண்டானவருத்தம் சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தால் இப்போது சுகம். அதனால்அவளுக்கு நன்றியறிந்ததோத்திரம் சொல்லி, எனதுநேர்த்திப்படி இதைப் பிரசித்தப்படுத்துகிறேன்.

பெரியநாவற்குளி அ. விஜயரெத்தினம்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 30-1953